






# ஞானச்சுடர்

## மலர்

ஆவணி 1999








வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் வழி

" அற்கா இயல்பிற்றுச் செல்வம்
அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் "

பொருள் :

செல்வம் நிலையாக இருப்பதில்லை. செல்வம் உள்ளநேரம் அறச் செயல்களைச் செய்வாயாக.

ஸ்ரீ

அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

86) மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் னருணாசலா (அ)

87) மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ வருணாசலா (அ)

88) யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்த தருணாசலா (அ)

89) யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்ட தருணாசலா (அ)

90) ரமணனென் றுரைத்தேன் ரோசங் கொளாதெனை
ரமித்திடச் செயவா வருணாசலா (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 20

1 9 9 9 ஆவணி

## பொருளடக்கம்

பக்கம்

1) மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் 1 - 4
2) இன்று உலகம் வேண்டிநிற்பது ஆன்மீகம் 5 - 6
3) இந்துப் பெண்களும் சமயமும் 7 - 9
4) கோமாதா வழிபாடு 10 - 11
5) உயர்திரு செல்லப்பா சுவாமியார் 12 - 13
6) சிந்தனைத் துளிர்கள் 14 - 15
7) பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய் மலர்ந்து அருளியவை - 16
8) கோபமும் தாபமும்
9) மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசைப்போட்டி
10) நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 34வது பீடாரோகண விழா
11) சந்நிதியான் 17 - 20
12) பெண்மையின் கொடுமுடி தாய் 21 - 24
13) உலகப் பற்றின்றி வாழ்ந்த அபிராமி பட்டர் 25 - 27
மாணவர் பக்கம்
14) திருப்தி 28 - 29
15) Easy Way to Learn English (Part-19) 30 - 31
16) சிவலிங்கம் - 32

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா
வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. M. நாகலிங்கம்
( உரிமையாளர், லக்ஷ்மி வெதுப்பகம் பத்தமேனி, அச்சுவேலி )

திரு. சி. ஆனந்தராசா
( இளைப்பாறிய ஆசிரியர், உடுப்பிட்டி )

திரு. கி. ஸ்ரீதரன்
( செல்வாபுரம், கரணவாய் தெற்கு )

திரு. அ. விஜயநாதன்
( அதிபர், வதிரி மெ. மி. பாடசாலை )

திரு. சிவகுரு கணேசலிங்கம்
( யாழ் / பல்கலைக்கழகம் )

திரு. த. இராஜேஸ்வரன்
( இலங்கை வங்கி, நெல்லியடி )

தலைவர் / செயலாளர்
( கலைமகள் ச. ச. நிலையம், இடைக்காடு - அச்சுவேலி )

திரு. க. சுந்தரலிங்கம்
( தலைவர், ச. ச. நிலையம், வளலாய் )

திரு. கே. யோகேஸ்வரன்
( ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம், கே.கே.எஸ். வீதி, யாழ். )

Dr. K. சிவஞானசூரியர்
( மாளிகாவத்தை, கொழும்பு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஞானச்சுடர்'
# ஆடிமாத வெளியீடு

வெளியீட்டுரை:-

ஆடிமாத மலருக்கான வெளியீட்டுரையை யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி. சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள். ஆத்மீக சிந்தனை அருகிப் போய்விட்டதோ என்று நாம் சிந்திக்கும் நிலையில் இது போன்ற ஆத்மீக சஞ்சிகைகள் வெளிவருவது அவசியமானதே என்று அவர் தமது ஆரம்ப உரையில் குறிப்பிட்டார்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம், என்பதற்கிணங்க சந்நிதியான் ஆச்சிரமம், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையும் பல்வேறு கைங்கரியங்களை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது என்பதை தெளிவுபடுத்தியதுடன் இது மேலும் சிறப்படைவதற்கு தங்களது ஆசீர்வாதங்களை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுரை:-

இந்த மலருக்கான மதிப்பீட்டுரையை ஓய்வு பெற்ற இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

மலரினுடைய அட்டைப்படத்தின் சிறப்பைப் பல கோணங்களில் இருந்தும் எடுத்து நோக்கிய அம்மையார் விளக்கை ஏற்றினால் எவ்வாறு ஒளி பிறக்குமோ அதே போன்று ஆத்மீக ஒளியை மக்களுக்கு ஏற்படுத்துகின்ற சிறப்பை அட்டைப்படம் கொண்டிருப்பதை தெளிவுபடுத்தினார்கள்.

மலரினுடைய ஒவ்வொரு கட்டுரையையும் எடுத்து அவற்றில் மறைந்திருக்கும் ஆத்மீகக் கருத்துக்களைப் பல உதாரணங்கள் மூலம் அடியார்களுக்கு வெளிப்படுத்தினார்கள்.

திருவீழிமிழலை ஆலயத்திற்குச்சென்ற அப்பர் சுவாமிகளும் சுந்தரரும் அங்குள்ள மக்கள் பட்டினியால் படும் வேதனையைக்கண்டு மனம் இரங்கி இறைவனிடம் முறையிட்டார்கள். பின்பு இறைவனிடம் பெற்ற பொருளைக்கொண்டு இரண்டு மடங்கள் அமைத்து அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டார்கள். அதே போன்ற பல சமயக்கருத்துக்களை மலர் தாங்கி வருவதையும் அம்மையார் தமது மதிப்பீட்டுரையில் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியிரட்டை மணிமாலை

வெண்பா

குறைமதிய வெண்கோடுங் கொன்றையுமார் வேணி
யிறைகுருவாஞ் சந்நிதிமே வீச — நிறைமருவு
வள்ளிமயி லுன்னை மருவுதற்குன் முன்னவனை
யுள்ளியது மென்னோ வுரை.

கலித்துறை

உரையுயர் கருணைப் பராபர சந்நிதி யொண் பொருளே
கரையார்த லில்லா விடர்கொள் சயந்தன் கனவிலுற்றாய்
நிரையாரு முன்விழிப் பார்வையென் பக்கம் நிலைக்கவைத்தால்
வரையா யிடர்வினை யெல்லாம் பொடியாய் மறைந்திடுமே.

வெண்பா

மறையறியே னன்பருள்சேர் வாழ்வறியேன் பத்தித்
துறையறியே னீதினெறித் தோயு — முறையறியேன்
காவிமலர்க் காட்டுக் கழனிவளர்ச் சந்நிதியாய்
பாவியெனைக் காப்பாய் பரிந்து.

கலித்துறை

பரிந்திடு மன்ன மலைகுவித் தென்றும் பசித்தழலை
யிரிந்திடச் செய்யன்ன தானமடங்க ளிலங்குமெழில்
விரிந்திடு சந்நிதி வேற்குகன் றாளினை வெம்பளியே
புரிந்திடு நாயே னகந்தனைத் தூய்மைசெய் பொற்றிருவே.

வாழி

வாழிசெல்வச் சந்நிதிச்சீர் வாழிமுரு கன்கருணை
வாழிகுற மாதியமின் வாழியயில் — வாழிமயில்
வாழிதுவ சச்சேவல் வாழியவன் மெய்யடியர்
வாழிதமிழ் வாழி மழை.

ஆக்கம் ; மணிப்புலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும்

## மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# யுவராஜ அபிஷேகம்

பாண்டவர்களும் கௌரவர்களும் வாலிப வயதை அடைந்தனர். சிறந்த பல பயிற்சிகளைப் பெற்றமையால் பூரணமான சிறந்த வீரர்களாக விளங்கினர். பாண்டவர்கள் அடக்கம், பணிவு, ஒழுக்கம் என்பவற்றிலும் மேம்பட்டு விளங்கினர். துருபதனைப் பாண்டவர் சிறை செய்து, குருதட்சணையாகத் துரோணாச்சாரியாரிடம் ஒப்படைத்தமையும், மக்களிடையே பரவி பொதுமக்களிடம் பாண்டவர்கள் பெரும் மதிப்பைப் பெறத் தொடங்கினர். திருதராஷ்டிர மன்னனும் இதனை அறிந்திருந்தான். ஆண்டுகள் சில கடந்தன. முடிக்குரிய மன்னனை ஈற்றில் இளவரசனாகப் பட்டம் சூட்டி மகிழ்தல் மன்னர்களிடையே உள்ள வழக்கமாகும். இதன் வண்ணம் தனது மகனாகிய துரியோதனனை இளவரசனாக்குவதா? அன்றிப் பெரும் வீரனும் மக்களின் நன் மதிப்பைப் பெற்றிருக்கும் பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமனை இளவரசனாக்கிப் பட்டம் சூட்டுவதா? என்ற இழுபறி திருதராஷ்டிர மன்னனின் மனதில் எழுந்தது. மக்கள் ஆதரவும் பெரியோர் ஆதரவும் தருமர் பக்கமேயிருந்தது. புத்திர வாஞ்சையினால் துரியோதனனை இளவரசனாக்குவது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் பயந்த மன்னன், முடிவில் தருமருக்கே இளவரசுப் பட்டம் கட்டி யுவராஜ அபிஷேகம் செய்து வைத்தான். இதனால் மக்களும் பீஷ்மர், விதுரர் முதலான அரசவைப் பெரியோர்களும் அகமகிழ்ந்தனர். ஆனால் கௌரவர்கள் இச்சம்பவத்தினால் பெரிதும் கவலை கொண்டனர்.

கௌரவர்கள் கொண்ட கவலை பொறாமையாக மாறத் தொடங்கியது. இளவரசாகிய தருமரும் பாண்டவர்களும் அயல் தேசங்களுக்குச் சென்று தம் பகைவர்களை அடக்கிப் பெரும் பொருட்களைக் கப்பமாகப் பெற்றுத் தம்நாட்டை வளப்படுத்தினர். பாண்டவர்களின் வீரத்தினால் மன்னர்கள் பலரும் அவர்களுடன் சமாதானமாக வாழத் தலைப்பட்டனர். இதனால் பகை அற்று நாடுவளம் பெறலாயிற்று. பாண்டவர்கள் அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளம் உடையவர்களாதலினால் தம் குடிமக்களையும் நன்கு கவனித்து அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றி வைத்தனர், இவற்றினால் எல்லாக் குடிமக்களின் அபிமானத்தையும் பெற்றனர். பாண்டவர் புகழ் நாடோறும் வளரலாயிற்று இதனை அறிந்த மன்னனும் கௌரவர்களும் பெரிதும் பொறாமை கொண்டு உளம் குமையலாயினர். பாண்டவர்கள் தம்முடன் இருப்பதனையே கௌரவர் வெறுத்தனர்.

இதனால் சகுனியின் மந்திரியாக விளங்கிய "கணிகன்" என்பவனுடன் துரியோதனன், சகுனி, கர்னன், என்போர் கலந்துரையாடினர். அவனுடைய துர்ப் போதனையால் துரியோதனனாதியோர் பாண்டவர்களை வாரணாவத நகருக்கு அனுப்பி அவர்களைத் தொலைவில் இருக்க ஏற்பாடு செய்யுமாறு தந்தையாகிய திருதராஷ்டிர மன்னனை வேண்டினர் திருதராஷ்டிரன் அரனது கோரிக்கையை முதலில் ஏற்கவில்லை. நாள்தோறும் மன்னனை அணுகித் தன்வேண்டுதலை எடுத்தியம்பி வந்தான். துரியோதனன் வாரணாவத நகரின் பெருமைகளை மிகைப்படுத்திப் பலரிடமும் பேசிவந்தான். வாரணாவத நகரின் பெருமைகள் பாண்டவர் காதில் விழலாயிற்று. மகனின் வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க முடியாது மன்னன் மிகவும் சங்கடப் பட்டான். முடிவில் புத்திர வாஞ்சை அவனை வென்றது பாண்டவர்களை அழைத்து அவர்களை நோக்கி "மைந்தர்களே! வாரணாவதம் என்னும் நகரம் வடக்கேயுள்ளது. அது மிகவும் விசேஷ மகிமை பெற்றது. அங்கே சிவனின் ஆலயத்தில் மிகவும் சிறந்த முறையில் திருவிழா நடைபெற விருக்கிறது. எனவே அவ்விழாவைக் கண்டு தரிசித்து அந்நகரையும் சுற்றிப் பார்த்துச் சிலகாலம் அங்கு தங்கி வாருங்கள்" என்று பகர்ந்தார்.

பெரியதந்தையின் உளக் கருத்தை அறிந்து கொண்ட பாண்டவர்கள் அவரின் உள்ளத்து எண்ணத்தைப் புரிந்து கொண்டார்கள். பாண்டவர்கள் வாரணாவத நகரம் புறப்படுகிறார்கள் என்ற செய்தி துரியோதனனின் உள்ளத்தைக் குளிர்வித்தது. தனது சதித்திட்டத்தைத் தீர்மானிப்பதற்காய் சகுனி, முதலானோருடன் கூடித்தீர்மானித்தான். அதற்கமையப், பாண்டவர்களை அந்நகரில் கொன்று விடுவதற்கு ஏற்பாடு செய்யலானான். தன் அந்தரங்க உதவியாளர்களில் மிகவும் கொடியவனாகிய புரோசனன் என்பவனை அழைத்து அவனிடம் 'புரோசனா, பாண்டவர்கள் வாரணாவத நகரம் நோக்கிச் செல்கிறார்கள். அங்கே சிலகாலம் தங்கியிருப்பார்கள். அவ்வேளையில் நீ அவர்களைக் கொன்றுவிட வேண்டும். இது தக்க தருணம். எனவே நீ விரைந்து சென்று வாரணாவத நகரில் எளிதில் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய வகையில் பெருமாளிகை ஒன்று அமைக்க வேண்டும். பாண்ட

★ நல்லதையே பேசு அல்லது மௌனமாக இரு. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் நகருக்கு வந்ததும், அம்மாளிகையில் தங்க வைத்து அவர்கள் தூங்கும் நேரத்தில் மாளிகைக்குத் தீயிட்டு அவர்களைக், கொன்றுவிட வேண்டும். இதுவே என் திட்டம் எனவே விரைந்து சென்று அப்பணியை நிறைவேற்று" என்று கூறி அவனுக்குப் பெரும் பொருட் குவியலை வழங்கி வாரணாவத நகருக்குப் புரோசனனை அனுப்பி வைத்தான் பாண்டவர்கள் விரைவில் மாண்டு மடிவர் என்ற மனக்களிப்புடன் துரியோதனன் நிம்மதியடையலானான்

பாண்டவர்கள் தம் தாயாகிய குந்திதேவியையும் உடன் அழைத்துக் கொண்டு, பீஷ்மர், விதுரர் முதலானோரிடம் விடைபெறச் சென்றனர். பெரியவர்கள் அனைவரும் மிக்க கவலையுடன் விடைகொடுத்தனர். அப்போது விதுரர் பாண்டவர்களை நோக்கி "மைந்தர்களே! அரசன் என்பவன் எதிரிகளின் உளக் கருத்தை முன் உணரும் ஆற்றல் பெற்றிருப்பானாயின் அவ்வரசனைப் பகைவர்களால் வெல்லமுடியாது. உலோகங் களினால் ஆன ஆயுதங்கள் மட்டும் ஆபத்தானவை அல்ல. உலோகம் அல்லாத ஆயுதங்களும் ஆபத்தைப் பயப்பனவாக மாறக்கூடும். தீ காட்டை அழிக்கும். ஆனால் காட்டிலுள்ள பொந்திலுள் வாழும் எலியைத் தீ ஒன்றும் செய்யாது. தீப்பிடிக்கும் நேரத்தில் காட்டில் வாழும் முள்ளம் பன்றி சுரங்கத்துள் புகுந்து உயிர் காக்கும். நடந்து செல்லத் துணிவு வேண்டும். துணிவுடையவனுக்கு வழிகள் தானே துலங்கும், திசைகள் தானே வெளிப்படும்" என்று பொருள் செறிந்த அறிவுரை வழங்கி மிக்க துயருடைந்தவராய் விடைகொடுத்தார்.

மிக்க மனச் சோர்வுடையவராய்ப் பாண்டவர்கள் விடைபெற்றுப் புறப்பட்டனர். பாண்டவர்களை வழியனுப்ப வந்த பொதுமக்கள் அழுது புலம்பினர். பாண்டவர்களைப் பிரிய முடியாத பொதுமக்கள் அவர்களைப் பின்தொடர்ந்து நகரின் எல்லை நோக்கிச் சென்றனர். மக்கள் படும் வேதனையைக் கண்ட தருமர் தேரினின்று இறங்கி அவர்களை நோக்கி "அன்புடையீர், நாங்கள் பெரியதந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செல்கின்றோம், கவலைப்படாதீர்கள் நீங்கள் எங்கள் மீது அன்புடையோராயின் நகருக்குத் திரும்பிச் சென்று அமைதியுடன் இருங்கள். இதுவே என் விருப்பம் என்று பகர்ந்து நின்றார். அப்போது மக்கள் தருமரின் வேண்டுகோளை ஏற்று நகர் திரும்பினர். பாண்டவர்கள் மிக்க துயரடைந்தவராய் வாரணாவத நகர் நோக்கி விரைந்தனர்.

பயணம் செய்யும்போது குந்திதேவி தருமனை நோக்கி "மைந்தா விதுரர் கூறிய அறிவுரையின் பொருள் யாது?" என்று வினாவினாள். அப்போது தருமர் "தாயே நஞ்சினாலும் தீயினாலும் ஆபத்து விளையலாம்" என்று விதுரர் எச்சரித்திருக்கிறார். என்று கூறினார். இவ்

வுரைகளைச் செவிமடுத்த குந்திதேவி மிக்க கவலையடைந்தவளாய் மௌனமுற்றுப் பிரயாணத்தைத் தொடரலானாள். பாண்டவர்கள் தங்கள் நகருக்கு வருகிறார்கள் என்பதனை அறிந்து கொண்ட வாரணாவத நகரமக்கள் பாண்டவர்களை வரவேற்கப் பெரும் ஏற்பாடுகளைச் செய்யலாயினர். நகரில் எல்லையில் வந்து பாண்டவர்களைப் பெரும் உவகையுடன் நகரினுள் அழைத்துச் சென்றனர். புரோசனனும் அவர்களுள் ஒருவனாகக் கலந்திருந்து பாண்டவர்களை உவகையுடன் வரவேற்றான்.

[தொடரும்...

நூலகர்,
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை
(மல்லாகம்)

" வண்டமிழ் வேந்தன் "
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

## மரணம் அனைவரையும் சமமாக்குகிறது

ப்ளுடார்க் எழுதிய நூலில் பின்வரும் விபரம் தரப்பட்டிருக்கிறது: டையோஜினிஸ் என்ற தத்துவஞானி சில மனித எலும்புகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த மாமன்னர் அலெக்சாண்டர் அந்த தத்துவஞானியிடம் "நீங்கள் எதைப்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினார்.

டையோஜினிஸ் மன்னரைப் பார்த்து, "அரசே! நான் எவ்வளவு முயன்றும் உங்களுடைய தந்தையின் எலும்பு எது என்றும் உங்களுடைய அடிமைகளின் எலும்புகள் எவை என்றும் என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை" என்று பதிலளித்தார்.

ஓர் அரசனுடைய உடலையும். அடிமைகளின் உடலையும் மரணம் சமமாக்கிவிடுகிறது.

★ ஒழுங்காக வாழ்பவன் சிறந்த போதகன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உலகம் வேண்டி நிற்பது

## ஆன்மிகம்

விஞ்ஞானத்தினாற் சாதிக்க முடியாதவை பல உள்ளன. விஞ்ஞானத்தினால் மனிதருக்கு அமைதியைத் தரமுடியுமா? நிம்மதியை வழங்க முடியுமா? முடியாது. வேண்டுமென்றால் இவற்றைக் குழப்ப முடியும்.

மக்கள் மத்தியில் ஆன்மிகம் வற்றிவிட்டது. அதனாற் வெறுமை பெருகிவிட்டது.

மனிதநேயம், மனிதவிழுமியங்கள், மானுடம் என்பன ஆன்மிகம் சார்பானவை. இவற்றை அலட்சியப்படுத்தியதில் இந்த நூற்றாண்டில் முன்னென்றுமில்லாத அளவிற்கு மிகப்பெரியசாதனை படைக்கப்பட்டுள்ளது.

உலகியல் சார்ந்த வளர்ச்சியிற் பெருமையையும் ஆன்மிகம் சார்ந்த பண்பு விருத்தியில் சிறுமையையும் ஏற்படுத்துவதில் இந்த நூற்றாண்டு வெற்றி கண்டுள்ளது.

இச்சமத்துவமின்மையே, தற்கால உலகில் தனிநபர், குடும்பம், சமூகம் தேசம், மண்டலம், ஏன்முழு உலகமுமே முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் குழப்பங்கள், வன்செயல்கள், போர் அமைதியின்மை யாவற்றிற்கும் மூல காரணமாக உள்ளது.

சரியான காரணத்தை அறியாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலுகின்றனர். தீர்வுகள் தோல்வி காண்பதற்கு இதுவே காரணம். பிரச்சினைகள், முழுக்க முழுக்க உலகியல் அடிப்படையிலேயே அணுகப்படுகின்றன. உலகியலிற் சுயநலம் முக்கியத்துவம் பெறுகிறது. ஆன்மிகத்திற்கு இடமில்லை. ஆன்மிகம் பிறர் நலம் நோக்கியது அமைதியின்மைக்கு இதுவும் காரணம்.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிறது வள்ளுவம். உண்மையை உண்மை அறிவினாலேயே அறிய முடியும். ஆன்மிகம் சார்ந்த அறிவுதான் உண்மையான அறிவு. "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்" மனிதர்களின் அறிவு பொய்யோடு புணர்ந்ததாகவே இருக்கும். பொய்யறிவினால் உண்மையை அறிந்து கொள்ளவும் முடியாது சாந்தியை அடையவும் இயலாது மனிதர்கள் இன்று நன்றாக நடிக்கத்தெரிந்து கொண்டார்கள். நடிப்பு என்றால் பொய் தானே. நல்ல மனிதர்களாக வேடமிட்டு நடிக்கிறார்களே தவிர நல்ல மனிதர்களாக மனிதத் தன்மைகளுடன் நடந்து கொள்கிறார்களில்லை.

குருடனுக்கு குருடன் வழிகாட்ட முடியுமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத் தன்மைகளுடன் நடந்து கொள்வது ஆன்மிக வாழ்வு ஆன்மிகம் இன்று வற்றி விட்டது. அதனால் மனிதத்தன்மைகள் மறைந்து விட்டன. மனிதப்போலிகள் மலிந்து விட்டனர். மனிதப் போலிகள் உள்ள வரை சாந்தி, சமாதானம் ஏது? இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டு மாயின் ஆன்மிகம் மறுமலர்ச்சி காணவேண்டும். ஆன்மிகம் இல்லாமல், சாந்தி, சமாதானம் இல்லை, மக்களுக்கு, வாழ்வில்லை. எனவே, உலகம் இன்று உலகம் இன்று வேண்டி நிற்பது ஆன்மிகமேயாகும்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல்; மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல்; சாந்தி, சமாதானத்தோடு வாழ்தல்; எல்லோரும் இன்பமாக வாழ்தல் என்பன மனித வாழ்க்கையுடன் ஆன்மிகம் செறியும் போது தான் சாத்தியமாகும்.

ஆன்மிகத்தை மறுப்பவர் வாழமறுப்பவர் ஆகிவிடுகின்றனர். ஆன்மிகம் இளமை தொட்டு மரணபரியந்தம் மனிதனை விட்டகலாதபடி பார்த்துக் கொள்ளுதல் அவசியம்.

ஆன்மிகம் இன்ன பருவத்திற்குரியது என்று கூறமுடியாது. எப்ப ருவத்தினருக்கும் உரியதே வாழ்க்கையைத் தூய்மைப்படுத்திச் சுவை யையும் இன்பத்தையும் சேர்ப்பது ஆன்மிகம்.

அன்பு, உண்மை, நன்னடத்தை, இன்னா செய்யாமை என்பன ஆன்மிகத்தின் நான்கு தூண்கள் இவற்றின் ஒருதூண் பழுது படினும். ஆன்மிகம் ஆட்டம் கண்டுவிடும்

பிரார்த்தனை ஓர் அருமையான ஆன்மிக சாதனை. எம்மைப் படைத்துக் காத்தருளுகின்ற இறைவனுடன் நாம் கொள்ளும் தொடர்பே பிராத்தனை எமக்காக மட்டுமல்ல; உலகசேம நலன்களுக்காகவும் நாம் பிராத்திக்க வேண்டும் இறைவன் எமக்குத் தாயுந்தந்தையுமாக உள்ளான். இல்லாதவை இறைவனிடம் கேட்டுப்பெற வேண்டும். இன்று உலகில் ஒழுங்கு. அமைதி, சாந்தி' நிம்மதி என்பன இல்லாமல் உள்ளன. எனவே, இவற்றைத் தருமாறு இறைவனை வேண்டுதல் செய்தலே முறையாகும். பிரார்த்தனை மூலம் எண்ணங்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றன. தூய எண்ணங்கள் உலகினை வாழ்விப்பவன் அப்போது மனிதவாழ்வு ஆன்மிக வாழ்வாக மலர்ச்சி பெறுகிறது.

எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க.

குமாரசாமி சோமசுந்தரம்

---

★ கடன் வாங்காதவனுக்கு கவலைகள் இல்லை. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பெண்களும் சமயமும்

சமய வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டு நம் சமுதாயம் முன்னேறுதற்குப் பெண்கள் பெரும் பங்காற்ற முடியும். நம் சமய வரலாற்றிலும் பெண்கள் சிலர் பெரும் பங்காற்றியதை யாம் மறக்க முடியாது. நல்ல தாயாக, சிறந்த மனைவியாக அன்புள்ள சகோதரியாக வாழ்ந்து காயத்தொண்டு செய்து பேரடியார்கள் சிலரை நம் சமய வரலாற்றில் நாம் காணாமல் இல்லை. இங்ஙனம் சிறந்த சகோதரியாக வாழ்ந்து அப்பர் சுவாமிகளைச் சைவ உலகிற்கு அளித்த திலகவதியாரையும் நின்றசீர் நெடுமாறனுக்குத் தேவியாகி அம்மன்னனைச் சிவநெறிக்கு ஆக்கியதோடு சைவ எழுச்சியையும் ஏற்படுத்திய மங்கையர்க்கரசியாரையும் நாம் எவ்வாறு மறப்பது தவிக்க நிலையிலும் தம் இரணப்பக்குவத் தாய் அம்மையாக வாழ்ந்த காரைக்கால் அம்மையாரையும் இங்கு நினைவு கூற வேண்டும்.

ஆலயம் வழிபாட்டிற்குரிய இடமாக இருந்தாலும் சமய ஸ்தாபனங்களாகவும் ஆலயங்களைப் பெரும்பாலும் கருதுகின்றோம். ஆயின் ஒருவரின் சமய வாழ்க்கை இல்லத்திலேயே தொடங்குகிறது. சமய வாழ்க்கை மலருவதற்கேற்ற சூழலை இல்லத்தில் யாம் படைத்துத் தர முடியாவிட்டால் வாழ்க்கையின் முதற்படியிலேயே வழுக்கி விடுகிறோம் என்பதே பொருள். இந்து மக்களின் இல்லங்கள் உண்மையில் சமயச்சிந்தனையின் அடிப்படையில் அமைவனவே. கட்டிட அமைப்பு மட்டுமன்றி வீட்டிலும் தூய்மை பேணப்படுதல் ( செருப்பிட்டுக்கொண்டு செல்லாமை ) அமைப்பிடம் பூசையறை மாவிலைத்தோரணங்கள் போன்ற சிந்தனையும் சமய வாழ்வின் எதிரொலியே எனக்கருதின், இல்லங்கள் இந்துப்பண்பாட்டை விளக்கி நிற்கும் நிலையங்களாக வேண்டும். ஒரு பெண்ணின் பெருமை இப்பண்பாட்டு நிலையத்தின் தலைவி என்ற நிலையிலேயே சிறக்கிறது. திருமணத்தின் போது இல்லக்கிழத்தியாக தலைவியாகச் சிறக்கின்ற பெண் தாயாகி வளர்கின்ற நிலையில் பலராலும் மதிக்கத்தக்கவளாக மேலும் உயர்கிறாள்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்கிறார் திருவள்ளுவர்.

ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்திற் சிறந்த சமயச் சூழலை ஏற்படுத்துவது இல்லத்தின் தலைவியையே பெரிதும் பொறுத்துள்ளது. மனைக்கு விளக்கம் மடவார் என்று பெரியோர்கள் கூறுவர். திருகலட்சுமி என்னும் வழக்கையும் நாம் கருத வேண்டும். சமயம் இல்லத்தலைவியின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருப்பது சமயப்பண்பாட்டின் அடிப்படையில் பாரம் பரிய நடைமுறையில் ஈடுபாட்டோடு வளர்ந்து வருகின்ற ஒரு பெண் சாத்திர அறிவு பெருமல் இருந்திருக்கலாம் ஆயின் அவள் வாழ்க்கை சமய பாரம்பரியத்தில் அமைந்த இலட்சிய வாழ்க்கையாகவே இருக்கும். நூல் வழி கிடைக்கும். அறிவை விடவும் பாரம்பரியக் கோட்பாட்டில் ஒரு பெண்ணுக்கு இருக்கும் உறுதியே அவள் வாழ்க்கை மேம்பாட்டுக் குத் துணை செய்ய வல்லது. சில சமய ஒழுக்கங்களைப் பேணிக்காப்ப தோடு குடும்பத்திற்கென்றே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழும் தியாக வாழ்க்கையும் நம் பண்பாட்டின் வழி அவளுக்குக் கிடைத்த ஒரு செல்வமேயாகும்.

இந்துக்கள் அளவில் சமயம் என்பது சில கோட்பாடுகள் அன்று. அது ஒரு வாழ்க்கை நெறியே. எனவே, அன்றாட வாழ்க்கையிலும் அதனைக் காண முடியும் காலையில் எழுந்து நீராடி இறைவனை நினைந்து விபூதி அணிந்து குங்குமப் பொட்டிட்டு அவள் குடும்பத் தொண்டினை, பணியினை மலர்ந்த முகத்தோடு செய்து வரும் செயல் அவள் வாழ்க்கை அடிப்படையின் சமய உணர்வை யாவருமே எழிதில் அறிந்து கொள்ளுமாறுள்ளது. இத்தகைய பெண்ணின் தோற்றமே நம் பண்பாட்டின் வடிவம் எனல் வேண்டும். இத்தகைய பெண்மணி தாயா கித் தன்குழந்தையைத் தன்பாட்டுச் சூழலில் வளர்க்கும் திறத்திலேயே நம் சமயத்தின் பிற்காலம் அடங்கியுள்ளது எனலாம். தாய் அன்பிலேயே குடும்பப் பிணைப்பு உருவாகிறது. இக் குடும்பப் பிணைப்பே நம் சமயக் கல்வியின் பண்பாட்டுக் கல்வியின் முதற் பாடம் எனலாம். காலம் செய்த கோலத்தால் இன்று இளைஞர்கள் போன்று பெண்களும் பாரம்பரியப் பண்பாட்டிலிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்று விட்டாலும் இன்றும் ஓரளவேனும் நம் சமயப் பண்பாடு பேணிக் காக்கப்படுகிற தென்றால் அது பெரிதும் பெண்களாலேயே என்றுதான் கூறவேண்டும் திருக்கோ வில்களிலும் சமயக் கொண்டாட்டங்களிலும் பெண்களே மிகுதியாகக் கலந்து கொள்கின்றனர். இன்றைய நிலையில் உள்ள இந்துப் பெண்களைப் பற்றியும் அவர்கள் ஓர் இலட்சிய இந்துப் பெண்ணாக வாழும் வழி வகைகளையும் ஓரளவு சிந்திப்பது நலம் — சமுதாய நிலையில் ஏற்படும் நடை உடை பாவனை போன்ற மாற்றங்களைப் புறஉலக வளர்ச்சி என் றால் அவை இன்று புதிதாக ஏற்படுவனவல்ல. ஒவ்வொரு காலத்திலும் ஏற்பட்டுள்ளன. இனியும் மாற்றம் ஏற்படவே மேலும் விஞ்ஞான முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேற்றத்தால் ஏற்பட்ட சமுதாய வளர்ச்சி என்றால் அதுவும் புற வளர்ச்சியே. இவ்வளர்ச்சி நம் சமய வாழ்வுக்கு எவ்வகையிலும் முரணான தன்று. ஒருவகை வளர்ச்சி என்பது உண்மையில் அவ்வளர்ச்சியே. சில வாழ்க்கை முறைகள் ஒழுக்கங்கள் பழையன என்ற காரணத்தாலேயே ஒதுக்கத்தக்கவை யாகிவிடக் கூடாது என்பதே இங்கு வற்புறுத்தப்பட வேண்டுவது. புதுமைப் பெண்ணைப் பாடிய பாரதியும் பழைமையில் வழிவந்த இந்துப் பெண்ணின் புதுவடிவத்தையே பாடினான்.

பதுமைப் பெண்களின் சொற்களும் செய்கையும்
பொய்ம்மை கொண்ட கலிக்குப் புதிதன்றி
சதுர் மறைப்படி மாந்தர் இருந்த நாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்.
என்னும் தொடர் இங்கு கருதத்தக்கது.

சமுதாய மாற்றத்தால் நம் மக்கள் சமய வாழ்வைக் காலத்திற் கொவ்வாததெனக் கருதுவதன் காரணம் சமயம் பற்றிய போதுமான அறிவின்மையும் ஆழ்ந்த மனப்பான்மை யுமேயாகும். ஒருவனை அவன் புறத்தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடுதல் தவறு என்பதை யாம் அறிவோம்.

உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

என்பது திருக்குறள்.

புறவாழ்க்கையில் மனிதன் தன் அறிவாற்றலால் சௌகரியங்களைத் தேடிக் கொள்ள முடிந்த காரணத்தாலேயே அகவாழ்க்கை சமய வாழ்க்கை தெய்வீகவாழ்க்கை காலத்திற்கு ஒவ்வாதது என்று கருதுவது சமயவாழ்வின் அடிப்படையினை விளங்கிக் கொள்ளாமை என்று கூறவேண்டும். நம் சமய அறிவுக் குறைபாட்டால் கேள்வி எழுப்புவதைத் தவிர்த்துச் சமுதாய நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியோடு பழைய பண்பாட்டின் வழி கிடைத்துள்ள வாழ்க்கை நடைமுறைகளையும் சமயப் பண்பாடுகளையும் பேணிக்கொள்வது இந்துக்கள் என்பதை உணர்த்த உதவும்.

தொகுப்பு: க. சிவசங்கரநாதன்

[illegible]

அறிவு பெருகும் போது சந்தேகமும் பெருகுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா வழிபாடு

வீட்டில் வளரும் விலங்கினுள்ளே மேன்மையான பசுவை நாட்டில் நல்ல முறையில் நாம் காத்து வளர்த்தல் வேண்டும். பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலை எமக்களிப்பது பசுவின் பண்பாகும். பசுவை தெய்வமாகக் கருதி நாம் வீட்டில் வளர்த்து வந்தால் எமக்கு பலவித செல்வத்தை ஈயும். பசு சாதுவானது; பசு எங்கள் வீட்டு மஹாலஷ்மி என்ற சொற்கள் எமது மனதை விட்டு அகலாதவை. "கோமாதா எங்கள் குலமாதா'' என்பதும். "பட்டி பெருகினால் பால் பெருகும். வாழ்வு மிகுந்து வரும்''. என்ற வார்த்தைகள் உண்மையானவையாகும்.

பசு ஒரு இறைத்தன்மை கொண்ட எமது சொத்து எனக் கருதுவது சாலப் பொருந்தும். எல்லாத் தேவர்களும் பசுவில் வாசஞ் செய்கின்றார்கள் என்பது வேதவாக்கு. பசுவின் கொம்புக்கு அடியில் பிரமாவும் விஷ்ணுவும் வாசஞ் செய்கின்றனர். சரீரத்தில் சிவபெருமானும் நடு நெற்றியில் சக்தி அம்பாளும் வீற்றிருக்கின்றனர் இவ்வாறு பசுவின் எல்லா அங்கங்களிலுமே எல்லாத் தேவர்களும் ரிஷிகளும் நிதிகளும் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஊட்டமான உணவையென்றும் எமக்குதவும் பசு நம்முன் உயிர் வாழும் நடமாடும் நமக்கு நற்சேவைகள் புரியும் ஒரு தெய்வம். இதனால் எமது சைவசமயம் பசுவை நித்தமும் வணங்கு எனக் கூறுகின்றது.

பசு கன்று ஈன்றதும் கன்று முதல்முதலில் "அம்பா'' எனவே அழைக்கும். சமஸ்கிருதத்தில் "அம்பா'' எனின் தமிழில் அம்மா எனப் பொருள் படும். ஆகவே பசு எப்பொழுதும் உலக மாதாவையும் வீட்டுக் கிருகலஷ்மியையும் அழைத்த வண்ணம் உள்ளது. ஆகவே 'இப்படியான மங்களகரமான சொல் நாம் வாழும் இவ் உலகில் ஒலிப்பது எமக்கெல்லாம் மங்களகரமானதல்லவா?

புதிதாக ஒரு ஆலயம் அல்லது வீடு கட்டுவதாயின் அத்திவாரம் இடுமுன் அவ்விடத்தில் பசுவைக் கட்டி புல்கொடுத்து ஆதரிப்பது வழக்கம் அதேபோல கட்டிடம் கட்டி முடிந்ததும் கட்டிடத்தின் நடுப்பாகத்தில் பசுவை வதியச் செய்யும் முறை உள்ளது. இவை கோவாசம் அல்லது பசுஜீவித்தல் எனப்படும். இதனால் சகல தோஷங்களும் அகன்று இலக்சுமி கடாட்சம் அங்கு கிட்டுகின்றது. சகல தேவர்களுமே அவ்

★ குழந்தைகளே ஏழைகளின் செல்வங்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தில் வந்து ஆசிர்வதிப்பது போல் அமைகின்றது. சில பூசையில் கோதர்சனம், கோபூசை என்பன உள்ளன. வீடுகளில் தினம் கோபூசை செய்வோர் உளர். விசேடமாகத் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற பண்டிகை நாட்களில் கோபூசை செய்வோரும் உளர். கும்பாபிஷேகம் இனிதே நிறைவாகி தசதர்சனம் எனப்படும் கிரியையில் கோதர்சனம் முதன்மையானதாகும். கும்பாபிஷேகம் கண்ட மூர்த்தியே பசுதர்சனம் செய்கின்றார். அதேபோல அடியார்களையும் பசுவை வணங்குங்கள் எனக் கூறியுள்ளார்கள். திருமணமாகி இல்லம் வரும் மணப்பெண் பசுவுக்குப் புல் கொடுத்து வணங்கி இல்லம் புகும் முறை ஒரு சில இடங்களில் காணப்படுகின்றது. இவை பசு வழிபாட்டின் மேன்மையைக் காட்டுகின்றன.

நாம் எமது பிள்ளைபோல பசுவை பேண வேண்டும். கள்ளமனம் இன்றி பசுவை நன்றே காக்க வேண்டும். பசுவால் எமக்குக் கிடைக்கும் பெறுபேறுகளோ பற்பல. பசு பால் தரும் ஆம்! பால் கறந்த உடன் அந்தச் சூட்டோடு முதலாம் காலப் பூசைக்கு இறைவனுக்கு அபிஷேகம் ஆகின்றது. நைவேத்தியம் ஆகின்றது. அதிகாலைப் பூசையின் போதும் அர்த்த சாமப்பூசையின் போதும் பால் நைவேத்தியம் உள்ளது. பாலில் உறை விட்டால் தயிரும் தயிரைக் கடைந்தால் வெண்ணெயும் வெண்ணெயை நெருப்பில் உருக்கினால் நெய்யும் கிடைக்கின்றது. பஞ்சகவ்வியம் யாது? பால், தயிர் நெய், கோமயம், கோசலம் என்பனவேயாம். அபிஷேகம் ஹோமம் யாவற்றிற்கும் நெய் மிக அவசியம். பசுவின் சாணவறாட்டியைச் சுட்டு அதன் வெண்சாம்பலை எடுத்தே விபூதி செய்யப்படுகின்றது.

பசுவின் பாலை நாம் கறந்து எடுத்தாலும் அது தனது கன்றுக்குத் தேவையான பாலை ஒழித்து வைத்துக் கொடுக்கும். இது ஒருவகைச் சேமிப்பு முறையாகும். எமக்கு பசு புகட்டும் சேமிப்புப் பழக்கத்தை நாமும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

எமது இந்து சமய அறநெறிகளில் சாலச்சிறந்தது பசுவிற்கு உணவளித்தலாகும். வீட்டில் பசுவை வளர்க்காதோர் பசு உள்ள இடம் தேடிச்சென்று புல் அல்லது பழம் கொடுத்தல் நல்லது.

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா! - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா" — பாரதியார்

"பசுவை வளர்த்து வழிபடுவோம்
வளமான நல்வாழ்வு வாழ்வோம்"

[illegible]
கா. கணேசதாசன் J. P.
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு செல்லப்பா சுவாமியார்

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

அஃதாவது: குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் தாழ்வில்லாத செல்வரும் கூடிப் பொருந்தியிருப்பதே சிறந்த நாடாகும்; என்பர் வள்ளுவப் பெருந்தகையார். இதில், தக்கவர் என்பது பேரறிவாளரைக் குறிக்கும். அவரோ இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே, என்னும் மூலகாரணத்தை அடையும் நல்வழிகளை உணர்த்தத் தக்கவர், எனலாம். இந்தவகையில் நாம்வாழும் யாழ்ப்பாணத்தில் பல பெரியார்கள் வாழ்ந்து தமது திருவடிகளை இங்கேபொறித்து வைத்தார்கள். இல்லறத் துறவிகளிலே பலர் பேரறிஞராய்ப், புலவராய் வாழ்ந்தார்கள்; இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் துறவறத்தில் மேம்பட்டிருந்தவர்கள் பலர். அவருள் பேர் விளங்குபவர் சிலர் இந்த வகையில் மூத்தவராகக் கருதப்படுபவர் கடையிற் சுவாமிகள் இவரது சிறந்த சீடரே உயர்திரு செல்லப்பாச் சுவாமிகள்.

செல்லப்பாச் சுவாமிகளின் அருமைச் சீடரே உயர்திரு யோகசுவாமிகள். இப்பெரியார் தாம் பாடிய நற்சிந்தனையிலே பலவிடங்களில் தமது குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளைப் பேற்றிப் பாடியுள்ளார். செல்லப்பாச் சுவாமியாரின் சீடர் பலரில் ஒருவராகத் திகழ்ந்தவரே தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் வாழ்ந்த கடவுள் சுவாமி என்பவர். இந்தக் கடவுட் சுவாமியாரே, அன்று முருகன் கூறிவாறு அன்னதானத்தைத் தொடர்ந்து செய்து வரத் தலைப்பட்டவராவார். இவரின் பின் மயில்வாகனச் சுவாமிகளும் பின் அவர் சீடர் முருகேசுச் சுவாமிகளும் அப்பணியைச் செய்து வந்தனர். அவரின் பின் புதிய கட்டடங்களை நிர்மாணித்து திரு. மோகனதாஸ் அவர்களும், திருப்பரங்கிரிநாதனைத் தலைவராகவும், திரு ந. அரியரத்தினத்தைக் காரியதரிசியாகவுமுள்ள நிர்வாகத்தினரே செல்வச்சந்நியான் ஆச்சிரமத்தில் தவறாமல் பலசைவ நிகழ்ச்சிகளோடு பெரிய அன்னதானப் பணியையும் நடாத்தி வருகின்றனர். இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் இவ்வளவு பெரிய அன்னதானத்தை நடாத்துமிடம் அன்னதானக் கந்தன்

காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.

வீற்றிருக்கும் சந்நிதியில் இந்த ஆச்சிரமமே என்று சொல்ல எவ்வளவு ஆசையாயிருக்கின்றது என்று திரும்ப அன்னாருள்ளிருந்து வெளிவரும் அடியார்களின் அகமும் முகமும் மலர்வதை யாவரும் அறிவோம். நிற்க.

செல்லப்பாச் சுவாமிகளின் தாயார் நல்லூரைச் சேர்ந்த பொன்னார் என்பார். தகப்பனார் வல்லிபுரம் வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவர். விவசாயஞ் செய்யும் பொருட்டு நல்லூரில் வந்த இவர், பொன்னாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு அதன் பயனாக இரு புத்திரரையும் இரு புத்திரிகளையும் பெற்றெடுத்தார். புத்திரருள் மூத்தவர் செல்லப்பாச் சுவாமியவர். இவர் தமது ஏகோதரி செல்லாச்சியம்மையாரின் பராமரிப்பில் நல்லூரில் வாழ்ந்து வந்தார். இந்தச் செல்லாச்சியம்மையாரின் மரபினர் இன்றும் நல்லூர் வாசலின் தென்புறத்தில் வாழ்ந்து வருகின்றனர். செல்லப்பாச் சுவாமிகள் ஆங்கிலந் தெரிந்தவராயிருந்த படியால் யாழ் / கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகம் பார்த்தவர் என்பர். அக்காலத்திலேயே ஆன்மீகத்துறையில் நாட்டங் கொண்டவராயிருந்தார். வீட்டுக்கு வந்தாலும் நல்லூர்த் தேர் முட்டியிலிருந்து தியானஞ் செய்வாராம். இரவும் மணிக்கணக்கிலும் நடக்குமாம். இதன் விளைவாக தனது ஆராய்ச்சி உத்தியோகத்தையுங் கைவிட்டுவிட்டார்.

கடையிற் சுவாமிகள் அடிக்கடி நல்லூருக்கு வருவதுண்டு. ஒரு நாள் அவருக்கு ஒருவர் கொடுத்த பழத்தைச் செல்லப்பாச் சுவாமிக்குக் கொடுத்தாரென்றும் அதன் பின் வேறொரு நாள், கடையிற் சுவாமிகள் ஒரு கடைக் காரரிடம் தாம் பெற்ற ஒரு வெள்ளி ரூபாவை, ஒரு வெற்றிலையில் மடித்து செல்லப்பாச் சாமிகளிடம் கொடுத்ததுமன்றி அவர் தலையில் தமது கைக்குடையை வைத்து அசைத்து விட்டு அப்பாலே போய்விட்டாரென்றும் கூறுவர். இந்த நிலையே செல்லப்பாச் சுவாமிகளுக்குத் தீட்சையாக, அவர் ஞானம் பெறுவதற்குக் காரணமாயிற்றென்றும் கூறுவர். சுவாமிகள் உலகத்தையே மறந்து தியான வசத்தராய் நல்லூர்த் தேரடியில் அசையாது வீற்றிருக்கலானார். தம்மிடத்தில் அணுக யாரையேனும் விடமாட்டார். சதா நிஷ்டையில் இருந்த போதும் ஏதோ பேசிக் கொண்டுதானிருப்பாராம். அவர் திருவுருவோடு பேசும் பேச்சு யாருக்குத்தான் புரியும். இப்பேச்சையறியாத சனங்கள் அவரை விசர் செல்லப்பா, என்று அழைக்கத் தொடங்கி விட்டனர். இந்தப் பட்டம் சுவாமிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது இந்நிலையை அன்று கண்ட குலசேகராழ்வார் கூறியதை நாம் கருத்திற் கொள்ளல் நன்று.

புலவர் வை. க. சிற்றம்பலம்

தொடரும் ....

☆ முடியும் என்று நம்புபவர்களுக்கு எதுவும் முடியும் ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிர்கள்

## மனிதப்பிறவியின் பயன்

மணிவாசகர் அருளிச்செய்த சிவபுராணம் மூலம் புல்லிருந்து தேவர்கள் வரை (14) பதினான்கு வகையான பிறப்புக்கள் உண்டு என்று அறிய முடிகிறது. அதிலும் அவை அவ்வகைப் பிறப்பை எடுத்து செயல்படும் நிலைகளிலிருந்து ஏற்ற முறையில் ஈடேறவோ ஈடேறமுடியாத நிலையேற்பட்டும் அதன்படி ஈடேறமுடியாதவை மீண்டும் பிறப்பெடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்படியான பதினான்கு வகைப்பிறப்பில் 9வது வகையில் அடங்கியதே மனிடப்பிறப்பு. அரிது, அரிது மானிடராதல் அரிது அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என ஒளவையார் பாடியுள்ளார் ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வொரு பிறப்பிலும் செய்கின்ற தவறுகளினால் சாபம் பெற்று மானிடப் பிறப்பை பெறுகிறார்கள். எந்தப் பிறப்பிலும் செய்யும் தவறுகளுக்கு, 'சாபங்களுக்கு விமோசனம் பெறவேண்டியதாயின் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவையுடைய மானிடப் பிறப்பைப்பெற்று பல இன்னல்கள் தொல்லைகள், துயரங்கள் அனுபவித்து தன்னிலையடைய ஈடேற வேண்டும் மணிவாசகர் கூறியபடி பேய் கணங்கள் அசுரர், முனிவர் தேவர்கள் கூட தாம் செய்யும் தவறுகளினால் பெற்ற சாபங்களை நீக்க வேண்டி விமோசனம் பெற வேண்டுமானால் ஆராய்ந்து அறிந்து செயல்படக்கூடிய அரிய பிறப்பாகிய மானிடப்பிறப்பையே பெற வேண்டும். இதில் இருந்து பெறுதற்கரிய மானிடப்பிறப்பைப் பெற்ற நாம் மீண்டும் மீண்டும் பிறந்து இன்னலுறாது நன்னிலையடைய இப்பிறப்பின்பயனை நன்கு சிந்தித்து ஏற்றவாறு செயற்பட்டு நன்னிலையடைய முயற்சிக்க வேண்டும்.

இறைவன் எம்மையெல்லாம் சிந்திக்க வைத்து நன்னிலையடைய வைப்பதற்காகவே தேவர், முனிவர்களை தவறு செய்ய வைத்து அதற்குத் தண்டனையாக சாபம் பெறவைத்து இங்கு அறிஞராக அருளாளராக தோன்றவைக்கிறார் அவர்களின் செயல்பாட்டினால் அவற்றை நன்கு சிந்திந்து ஆராய்ந்து அறியும் அறிவையுடைய மனிதன் செயல்படவேண்டும். அதற்காகவே ஆழ்ந்த தத்துவங்களையுடைய மூவர் தமிழும் முன்மொழியும். உபதேசங்களும் வேத ஆகமங்களும் அருளி

★ அறிவற்ற அச்சம் இடையூறுகளை இரட்டிக்கிறது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிவனர். அன்றியும் கண்ணனாக பாரதத்தையும், இராமனாக இரா மாயணத்தையும் நடத்தி வைத்திருக்கிறார். அவனருளால் இவற்றிலுள்ள ஒவ்வொருவரின் செயற்பாடுகளையும் ஆராய்ந்து அறிந்து செயல் பட்டால் மனிதப்பிறவியின் பயனைப்பெறலாம் உய்வடையலாம்.

சூரியனில் இருந்து ஒளிக்கற்றைகள் வருகிறது. அதனால் பஞ்சில் குப்பைகூழங்களில் தீப்பிடிக்கிறதா? இல்லை ஆனால் இடையில் ஒரு குவியக்கண்ணாடியை வைத்து (கண்ணாடி) அதன்கீழ் பஞ்சைப்பிடித்தால் பஞ்சில் இலகுவில் தீப்பிடிக்கிறதல்லவா! அதன்மூலம் மற்றைய அழுக்குப் பொருட்களை அழிக்கமுடியுமல்லவா அதேபோல் நாம் எல்லாம் ஈடேற வேண்டியே ஆலயம் குரு அருளாளர்கள் கண்ணாடி போன்று உள்ளனர். "குருவில்லா வித்தை கூழ்வித்தை" என முதியோர் கூறுவதுபோல் நாம் ஆலயங்களுக்குச் சென்று குரு மூலமாக, அருளாளர் (சில பூசகர் கள்) மூலமாக அருள்பெற்று நன்னிலையடைய முடியும்.

சூரியனிடமிருந்து பெற்ற ஒளிக்கற்றையில் கண்ணாடி மூலம் பெற்ற தீயினால் அழுக்குப் பொருட்களை எரித்து அவ்விடத்தைப் புனிதமாக்குவதுடன் இருளையும் போக்கி ஒளியையும் பெறுகிறோம். அவ் ஒளியில் பல காட்சிகள், செயற்பாடுகளை காண்கிறோம். அது போலவே எம்மில் இருக்கும் வஞ்சனை, சூது, பாதகமான செயற்பாடுகள் போன்ற அழுக்குகளை அகற்றி உள்ளத்தைப் புனிதமாக்கி அறிஞர்கள், குரு, அருளாளர்கள் மூலம் அறிவொளியை ஊட்டி மனிதப்பிறவியின் பேற்றை உணரவைத்து உய்வடைய வைக்கிறான் இறைவன்.

வாகீசர் என்னும் முனிவர் கயிலை மலையில் இராவணன் ஆணவச் செருக்கினால் அகப்பட்டு நசியுண்டு அவலப்படும் போது கண்டு இரங்கி "இராவணா சாமகானப்பிரியன்" என்று கூறிச்சென்றார். அவரின் வாக்கின் தத்துவத்தைப் புரிந்த இராவணன் தனது தலைகளில் ஒன்றை எடுத்து நரம்புகளால் யாழ் உருவாக்கி சாமகானம் பாடி இறைவனை மகிழச் செய்தான். விடுதலை பெற்றான். வரங்களும் பெற்றான் நியம ளாய இராவணனுக்கு உதவி செய்தமையால் மனிதப்பிறவி பெற்று பல இன்னல்களைப் பெற்று அருளாளர்களுக்கும் வழிகாட்டி மீண்டும் வருக என சாபம் இட்டு அனுப்பிவிட்டார். அவ்வாகீசரே இங்கு திருநாவுக்கரசர் என்னும் நாமத்துடன் தோன்றி அவனருளால் பல அற் புதங்கள் செய்து தானும் அனுபவித்து அதன் மூலம் எம்மையும் ஈடேறும்

(தொடரும்.....

க. விஷ்ணுகோபால்

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்து அருளியவை

## உலக ஆசாபாசங்களால் விளையும் அபாயம்



ஒரு நாள் ஒரூரில் சாயங்காலச் சந்தை யொன்று கூடிற்று சில செம்படவப்பெண்கள், தாம் கொண்டு வந்த, மீனை அங்கு விற்றுவிட்டு வீட்டிற் குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர். முன்னி ருட்டு வந்துவிட்டது மழையோ பாட்டம் பாட் டமாகப் பெய்யத்தொடங்கியது. பாவம்! அவர் கள் என்ன செய்வார்கள்! பக்கத்தில் பூக்கடைக் காரனுடைய குடிசை இருப்பதைப் பார்த்து அங்கு ஓடினர். அந்தப் பூக்கடைக்காரன் மிகவும் நல்லவன். அவன் அங்கு வந்த அப்பெண்களின் பரிதாபகரமான நிலையினைக்கண்டு தனது வீட்டில் ஓர் அறையைக் காட்டி வேண்டுமானால் அன்று தங்க வும் அதனை உதவினார். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏற்று அவ் வறைக்குள் சென்றனர். அந்த அறை கமகமவென்று நறுமணம் வீசியதைக் கண்டு நாலுபக்கமும் பார்த்தார்கள், ஒருமூலையில் சிலபூக்கூடைகள் வைக்கப்பட்டு இருந்தன. அவை வாடிக்கையாகக் கொடுக்கும் சிலருக்கு மறுநாள் காலையில் கொடுப்பதற்காகவே அங்கு வைக்கப்பட்டன. ஆனால் மீன் வாசனையோடு பழகியவர்களுக்கு நறுமணம் வீசும் வாசனை எப்படிப் பிடிக்கும்? அதுமட்டுமல்லாமல் ஒருகால் கண்மூடி விழிக்கவும் முடியாததாயிருந்தது அவர்களுள் ஒருபுத்திசாலிப்பெண் மற்றவர்களைப் பார்த்து ஒருபுத்தி சொன்னாள். 'நமக்குத் தூக்கமோ வருவதாய் இல்லை இந்தப் பூக்கூடைகளை எடுத்து வேறிடத்து வைக்கவோ முடியாது. நம் மிடத்திலுள்ள மீன்கூடைகளைக் கொஞ்சம் நனைத்துப் பக்கத்தில் வைத் தால் அப்பூக்கூடைகளால் உண்டாகும் கஷ்டம் நீங்கும்' என்றாள்! யாவ ரும் அந்த யோசனையை ஏற்று அப்படிச் செய்தனர். உடனே எல்லாப் பெண்களும் குறட்டைவிட்டுத் தூங்கிவிட்டனர்.

---

★ **பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம்.** ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்க வாசனையின் பரமசக்தி இப்படிப்பட்டது தான் உலக ஆசாபாச எண்ணத்தோடும் வாழ்வோடும் கூடியவர் பரிசுத்த, பற்றற்ற தன்மைகளையோ நலங்களையோ நாடினால் அமைதிக்குறைவு சுகக்குறைவு முதலியவற்றோடு கூடியவர்களாகத்தானே இருப்பார்கள்.

(தொடரும் ......

திருமதி செ. அருளானந்தம்

## தாமரை மலரைப்போல ...

தாமரை மலர் அழுக்கான நீர், சேறு நிலத்தில், களைப் பற்று மணல் உள்ள இடத்தில் உருவாகலாம். ஆனால் அது இந்த நிலைகளிலிருந்து உயர்ந்து அழகான, கவர்ச்சிகரமான மலராக விளங்குவதுடன் சூரியனைக் கண்டவுடன் நறுமணம் வீசுகின்ற மலராகவும் மாறுகின்றது. அதுமட்டுமன்றி இறைவன் விரும்புகின்ற சிறந்த பூஜைக்கு மலராகவும் விளங்குகின்றது. சரஸ்வதியும், மகாலஷ்மியும் இந்த மலரில் குடியிருக்கின்றனர்.

மனிதர்களாகிய நாங்களும் விரும்பத்தகாத கெட்ட சூழல்களில் நாம் வாழ வேண்டியிருந்தாலும் அவற்றிலிருந்து விடுபட்டு சமுதாயத்தின் சிறந்த நிலையை அடைந்து மற்றவர்களால் மதிக்கப்படும் நிலைக்கு உயர வேண்டும். இப்படி உயர்வதால் தானும் சிறப்புப்பெற்று மற்றவர்களும் பயன் அடையும் நிலையைப் பெறலாம்.

ஆடிமாத ஞானச்சுடர் வெளியீட்டில்
திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள்

அன்பு இல்லாத எந்தமனித உடலும் ஒருசுடுகாடுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபமும் தாபமும்

பொறுமையாய் இருப்பது என்றால், எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் சோம்பேறித்தனத்துடன் இருப்பது என்று பொருளல்ல.

'நடப்பவை நம் விதிப்படி நடந்தே திரும்' என்று எப்பொழுதும் விதியை நொந்து கொண்டு செயற்படாமல் இருக்கக்கூடாது. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது நடந்தவற்றிற்காக உரைக்கப்பட்டதே அன்றி நடக்க இருப்பவற்றிற்காக அல்ல.

விதிப்படி நடந்து முடிந்தவற்றிற்காக நாம் மற்றவர்கள்மீது பழி சுமத்தி, அவர்களிடம் கோபம் கொண்டு, அனாவசியமாக அவர்களின் மனதைப் புண்படுத்தி அதனால் ஏற்படும் மனச்சஞ்சலங்களிலிருந்தும், உடல்நலக் குறைவுகளிலிருந்தும் நம்மைக் காப்பதற்காக அறிவுரைக்கப்பட்டதே 'பொறுமை'

அப்படியானால் பொறுமையுடன் இருப்பவன் எவ்வாறு செயற்பட வேண்டும்?

பொறுமையோடிருப்பவர்கள் நன்கு சிந்தித்து, முடிவெடுத்து, நிதானத்துடன், மற்றவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் செயற்பட வேண்டும் அவ்வாறு செயற்படும்போது, மற்றவர்கள் இவர்களுக்கு இடையூறாக இருந்தால் அந்த இடையூறுகளைக் களையத் தயங்கக்கூடாது. இவ்வாறு செயற்படுபவர்களை உலகம் ஏமாளி என்று கூறாது. இது போன்று சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை மஹாபாரதக் கதைகளும், ஸ்ரீகண்ணபிரானின் கீதையும் நமக்கு நன்றாகவே புரியவைத்துள்ளன.

பாண்டவர்கள் சிந்தித்து, நிதானத்துடனும் விவேகத்துடனும் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமலும் வாழ்ந்து வந்தார்கள். கௌரவர்களோ, இவர்களுக்கு எந்த வகையிலாவது இடையூறு செய்யவே திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

எல்லா இடையூறுகளையும் பொறுமையுடன் எதிர்கொண்டு கடைசிக்கட்டமாக வேறு வழியில்லாததால் போரை மேற்கொண்டார்கள் பாண்டவர்கள்.

இறுதிக்கட்டத்தில் அர்ச்சுனன் சுற்றத்தாருடனும், குரு, மற்றும் ஏனைய பெரியார்களுடன் போர் புரியத்தயங்கும் பொழுது ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனின் அந்த நேரத்திய கடமையை உணர்த்துகிறார்

அந்த நிலையிலும் பகவான் உபதேசிக்காவிடில், அர்ச்சுனனது சந்தேகங்களைத் தீர்க்காவிடில், அவர்கள் போரில் இறங்கியிருக்காவிடில் அவர்கள் எவ்வளவு வீரம் பொருந்தியவர்கள் ஆனாலும் அவர்களை ஏமாளிகள் என்றுதான் கருதவேண்டியிருக்கும்.

ஆக, தயை எல்லோரிடத்திலும் அன்பு என்பது எதுவரை, அதே போல் பொறுமையைக் கடைப்பிடிப்பது எதுவரை, என்று இதன்மூலம் புரியும்.

---

★ மானிட வாழ்க்கையில் பழக்கமே பெரிய வழிகாட்டி. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்வாகனம் சுவாமிகளின்

## 14 வது ஆண்டு குருபூசை தொடர்பாக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம்

## குறட்பா அறிவுப் போட்டி

### ஆண்டு 6, 7 பிரிவு I

1ம் இடம் ஸ்ரீ குலஸ்யா
யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம்.

2ம் இடம் பரமநாதன் நிருபா
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு.

3ம் இடம் பரமானந்தம் தர்ஜிகா
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு.

### ஆண்டு 8, 9 பிரிவு II

1ம் இடம் குணரெட்ணம் பாரதி
யா / இந்து மகளிர் கல்லூரி

2ம் இடம் செல்ராசா கலைச்செல்வி
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு.

3ம் இடம் அரியரத்தினம் அனந்தன்
யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

### ஆண்டு 10, 11 பிரிவு III

1ம் இடம் ச. சிம்பகி
யா / ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி

2ம் இடம் தர்மகுலசிங்கம் நிருஜா
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு.

3ம் இடம் ச. தர்சினி
யா / ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி

மானிட வாழ்க்கையில் பழக்கமே பெரிய வழிகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் பரிசு

பிரிவு I - 27 பிரிவு II - 31 பிரிவு III - 33

# பேச்சுப் போட்டி

## ஆண்டு 6, 7 பிரிவு I

1ம் இடம் வி. துவாரகன்
யா / ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை

2ம் இடம் தியாகலிங்கம் பிருந்தா
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு.

3ம் இடம் சுரேந்திரநாத் உமாமகேஸ்வரி
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு

## ஆண்டு 8, 9 பிரிவு II

1ம் இடம் கந்தசாமி பகுதான்யா
யா / அச்சுவேலி மகா வித்தியாலயம்

2ம் இடம் இரத்தினகுமார் சுகந்தினி
யா / வீரகத்திப்பிள்ளை ம. வி. தொண்டைமானாறு

3ம் இடம் பிரணவன் பரஞ்சோதிமூர்த்தி
யா / புரியோவான் கல்லூரி

## ஆண்டு 10, 11 பிரிவு III

1ம் இடம் ராஜதுரை சஞ்சீவ்
யா / அ. மி. கல்லூரி உடுப்பிட்டி

2ம் இடம் ச. பகீரதன்
யா / ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை.

3ம் இடம் சா. யமுனா ஆண்டு 11
யா / ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி

---

★ அன்பு எப்போதும் சகிப்புத்தன்மை உடையதாக இருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின்
# 34-வது பீடாரோகண விழா



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 34 - வது பீடாரோகண விழா 02-09-99 வியாழக்கிழமை காலை ஆதீனத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. 34 வருடங்களுக்கு முன்பு தென் இந்தியாவிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து ஞானசம்பந்தருடைய திருவுருவப்படமும் குத்துவிளக்கும் புனிதப் பொருட்களாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு முதலாவது குருமகா சந்நிதானம் அவர்களால் நல்லூரில் இந்த ஆதீனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமயத்திற்கும் சமூகத்திற்கும் சேவையாற்றக் கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்கள் எமது சமயத்தில் குறைவாகக் காணப்படுவது நாம் அறிந்ததே. இப்படியான ஒரு சூழ்நிலையில் தீர்க்கதரிசனத்துடனும் நீண்டதூரப் பார்வையுடனும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை எமது பிரதேசத்தில் உருவாக்கியமை மகிழ்ச்சியளிப்பதாகவே உள்ளது. இந்த வகையில் இதனை ஸ்தாபித்த இதன் முதலாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய நல்லைக்குருமணி சுவாமிநாததம்பிரான் அவர்களையும், அவரது தொண்டையும் நாம் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் நினைவு கூருவது பொருத்தமானது.

வரலாற்றில் என்றுமே அனுபவித்திராத சோதனைகளையும், நெருக்கடிகளையும் அனுபவித்து வருகின்ற எமது மக்கள் மத்தியில் நாளும் நிலையாக இருந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் இரண்டாவது குருமகாசந்நிதானமாக ஆதீனத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பது எமக்கு பெருமையளிப்பதாகவுள்ளது.

சுவாமிகள் ஒரு சமயத்தலைவராக இருந்தாலும் சமூகவியலாளராகச் சிந்திக்கின்ற தன்மை அவரிடம் காணப்படுவதை எம்மால் பாராட்டாமல் இருக்கமுடியாது. சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய சமூக, சமயத்தலைவர்களும், மற்றும் கல்வியாளர்களும் கூட பல சந்தர்ப்பங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தூய்மை அற்ற சிந்தனை உள்ளவர்களாகவும் போட்டி பொறாமை நிறைந்தவர்களாகவும் செயற்படுவதை கவலையுடன் சுவாமிகள் சுட்டிக் காட்டுவதை அவருடன் உரையாடும் பொழுது உணரக்கூடியதாக இருந்தது.

இளம் சமுதாயத்தினர் மத்தியில் ஏற்பட்டு வருகின்ற அறிவு வளர்ச்சியையும், சிந்திக்கும் மனப்போக்கையும் வரவேற்கின்ற சுவாமிகள் அவர்களுக்கு சமயநெறி முறைகளிலும், எமது பண்பாட்டிலும் நாட்டத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டியது எமது எல்லோருடைய பொறுப்பு என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

ஒருசைவசமய ஆதீனத்தின் குரு என்ற வகையில் அன்றாடம் அவர் ஆற்றவேண்டிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வருவதுடன் எமது சமயத்தின் நிறுவனரீதியான தலைவர் என்ற வகையில், அவர் அன்றாடம் இடம்பெறும் பல விழாக்களிலும் முக்கிய சந்திப்புகளிலும், மற்றும் பலநிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவேண்டியிருக்கின்றது. இவற்றிலெல்லாம் எமது சமயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பொறுமையுடனும், அடக்கத்துடனும் பங்குபற்றி எமக்கு கௌரவத்தை ஏற்படுத்தி வருகின்றார். இவற்றிற்கும் மேலாக எமது சமயத்திற்கும், எமது இனத்திற்கும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன என்ற வகையில் சுவாமிகள் சிந்திப்பது உண்மையில் எமக்கு மகிழ்ச்சியை அழிக்கின்றது.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற இந்துசமயம், தொடர்பான மகாநாட்டில் பங்குபற்றுவதற்கு அழைப்பு கிடைத்த பொழுதிலும் இந்தக் காலகட்டத்தில் எமது மக்களைவிட்டு நீண்டகாலம் பிரிந்திருக்க விரும்பாததினாலும் மற்றும் உற்சவகால சூழலில் எமது பிரதேசத்திலே தான் சமூகமளிப்பதே தனது முக்கியகடமை என்பதினாலும்' அந்த அழைப்பினை சுவாமிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இத்தகைய மக்கள் சிந்தனையுள்ள ஒரு ஆதீனத்தலைவரையும் அவர் அலங்கரித்துக்கொண்டிருக்கும் ஆதினத்தையும் பெருமைப்படுத்துகின்ற இந்த பீடாரோகணவிழா சிறப்பாக நிறைவேற வேண்டுமென்று எமது பேரவை உளமார வாழ்த்துகின்றது.


செயலாளர்
ச. ஆ. சை. க. ப. பேரவை

★ பிரமத்தை அறிந்தவன் பிரமமாகவே ஆகிவிடுகிறான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்படும் அன்னதானச் செயற்பாடு சிறப்பாகவும், தொடர்ச்சியாகவும், குறைவின்றியும் நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். அப்படியானால் எல்லாக் காலகட்டத்திலும் அன்னதானச் செயற்பாட்டிற்குத் தேவையான பொருள் வசதியும், பணவசதியும் தாராளமாகவும், தொடர்ச்சியாகவும் அங்கே கிடைக்கின்றதா என்ற கேள்வி எமக்குள் ஏற்படுவது இயல்பு.



உண்மையில் அவ்வாறான ஒரு தாராள நிலை எல்லாக்காலங்களிலும் அங்கே காணப்படுவதில்லை. அப்படியான ஒரு தாராளநிலை இருக்கமுடியாது. அது நடைமுறைச் சாத்தியமற்றதொன்று. ஆனால் வழமை போல நடைபெற வேண்டிய அன்னதானச் செயற்பாடுமட்டும் தினமும் தாராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது எப்படி நடைபெறுகிறது. எப்படிச் சாத்தியமாகிறது என்பதற்குரிய விளக்கத்தை அங்கே பழகுகின்றவர்களாற் கூடப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

★ இன்று நாம் செய்யும் நன்மையே நாளைய இன்பம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றி அதனைச் செயற்படுத்துகின்ற சுவாமி மோகனதாஸ் அவர்களிடம் கேட்டால் அது தன்னுடைய காரியமல்ல அது அவருடைய காரியம் என்று மட்டும் கூறுகின்றார்.

25 - 05 - 99 செவ்வாய்க்கிழமை ஆச்சிரமத்தின் சுவாமிகள் மோகனதாஸ் அவர்கள் வழமைபோலக் காலையிலேயே அன்றாடப்பணிகளில் ஈடுபடத்தொடங்குகின்றார். ஆனால் நேற்று மாலையிலேயே சிறிது கவலையடையத் தொடங்கிய அவரது மனநிலை இன்று மேலும் திருப்தியற்ற நிலையிலே குழப்பமடைந்து காணப்படுகின்றது.

28 - 05 - 99 வெள்ளிக்கிழமை பேரவையால் நடாத்தப்படும் வாராந்த வெள்ளிநிகழ்வு வழமைபோலச் சிறப்பாக ஆச்சிரமத்தில் நடைபெறுமென்பது அவருக்குத் தெரியும். அங்கே வழமைபோல அதிகமான அடியார்களும் கூடுவார்கள். அவ்வாறு கூடுகின்ற அடியார்களுக்கு வழங்கப்படும் அன்னதானமும் வழமைபோலச் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும். ஆனால் அதனை வழமைபோல செயற்படுத்த முடியுமா? என்பதே அவரின் தற்போதைய குழப்பத்திற்குரிய காரணமாகும்.

ஆம்! ஆச்சிரமத்தின் களஞ்சியத்தில் பொருட்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. அவற்றைப் பணம் கொடுத்து வாங்குவதற்குரிய பொருளாதார வசதியும் அப்பொழுது அவரிடம் இருக்கவில்லை ஆகவே எதிர் வரும் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட வேண்டிய அன்னதானச் செயற்பாட்டிற்கு என்ன செய்யலாம். எப்படிச் சமாளிக்கலாம்.... என்ற சிந்தனைகளே அவரது திருப்தியற்ற நிலைக்கும் அவரது குழப்பத்திற்கும் காரணமாகும்.

ஆனால் அவர் குழப்பமாக இருந்தாலும் அன்றாடம் ஆச்சிரமம் தொடர்பாகவும் பேரவை தொடர்பாகவும் செய்கின்ற காரியங்களைச் செய்யாமல் இருக்க முடியாது. ஏனென்றால் 1999 ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழா நடைபெறுவதற்கு இன்னும் சில தினங்களே இருந்தன. எனவே அந்த விழா தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய பல பணிகளை அன்றையதினம் செயற்படுத்தி முடிக்கவேண்டியிருந்தது.

ஆகவே வெளியிற்காட்டிக் கொள்ளாது அன்றைய பணிகளைச் செயற்படுத்தத் தொடங்கிய பொழுதிலும், 28 - 05 - 99 வெள்ளிக்கிழமை அன்னதானச் செயற்பாட்டிற்கு என்ன செய்வது என்ற எண்ணமே அவருக்குள் அலை மோதிக்கொண்டிருந்தது.

★ புலன்களை அடக்கி ஆள்வதே நன்று. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குறிப்பான நிலையிலும் யாழ்ப்பாணம் சென்று அங்கே செய்யவேண்டிய பல காரியங்களை முடித்துக் கொண்டு இறுதியாகச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அவரது துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் வந்து சந்தித்தார்கள்.

கதிரைவேற்பிள்ளை ஐயா அவர்களுக்கு விருது வழங்கப்பட இருக்கும் 1999 ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவில் அம்மையாரைக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுப்பதே அவர் அங்கே நிறைவேற்ற வேண்டிய பணியாகும்.

மேற்படி அழைப்பை அம்மையாருக்கு வழங்கி அதுபற்றி இருவரும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் அந்த நிலையில் கூட நாளை வெள்ளிக்கிழமை எதிர்நோக்கிக் கொண்டிருந்த பிரச்சினை சாமியாருடைய மனத்தில் அலை மோதிக்கொண்டுதான் இருந்தது.

அம்மையாருடைய உடல்நிலை திருப்தியில்லாதபடியால் விழாவிற்கு நேரடியாக வருகைதர இயலாதிருப்பதை மோகனதாஸ் அவர்களுக்கு எடுத்துக்கூறி கதிரைவேற்பிள்ளை ஐயா அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பிவைப்பதாக கூறுகின்றார். அப்படிக்கூறிய அம்மையார் மோகனதாஸ் அவர்களிடம் சிறிது நேரம் இருக்குமாறு கூறிவிட்டு உள்ளே சென்றவர் திரும்பி வந்து குறிப்பிட்டளவு பணத்தை மோகனதாஸிடம் கொடுக்கின்றார். கொடுத்தவர் இதனை ஆச்சிரமத்திற்குப் பயன்படுத்துங்கள் என்று கூறுகின்றார்.

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவம் நிஜம்தானா? என்று சிந்திக்க முடியாமல் மகிழ்ச்சியினாலும் வியப்பினாலும் திணறுகின்ற மோகனதாஸ் அவர்கள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அம்மையாரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆச்சிரமம் வந்து சேர்ந்தார். அங்கே அம்மையார் வழங்கிய பணத்தை எடுத்துப்பார்க்கின்றார். அதற்குள் 5000/- ரூபா இருக்கிறது.

28 - 05 - 99 வெள்ளிக்கிழமை அன்னதானச்செயற்பாடு வழமை போலத் திருப்தியாகவும், சிறப்பாகவும் சாமியாரால் மேற்கொள்ளப்படுகிறது. வந்திருந்த அடியார்கள் வழமைபோலப் பசிதீர்ந்து சாமியாரை மனதார வாழ்த்திவிட்டுச் செல்கின்றார்கள்.

அந்த வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவர் தான் அல்ல... ஆற்றங்கரையிலிருந்து தானே வழிநடாத்தி அன்னதானச் செயற்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்திக் கொண்டிருக்கின்ற சந்நிதியான் தான் என்று அவர்களுக்குக் கூறமுடியுமா! நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திருவிளையாடல்களைத் தனக்குள்ளே ஜீரணித்துக் கொண்டு வாழ்த்திய அடியார்களை வழி அனுப்பிவைத்து வெளியில் அன்னதானத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கின்ற அடியார்களை உள்ளே அழைத்து வருவதற்காக வெளிக்கதவை நோக்கி நடக்க ஆரம்பித்தார் சுவாமிகள் மோகனதாஸ் அவர்கள்.

சந்நிதியில் நடைபெறுகின்ற அன்னதானப் பணி மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்டதல்ல. அது சந்நிதி முருகனே நேரில் வந்து மருதர் கதிர்காமரை ஆட்கொண்டு சமையலுக்குத் தேவையான அரிசி, மற்றும் மரக்கறிகளைக் கொடுத்து சமைக்கச் செய்து அன்னதானச்செயற்பாட்டை மேற்கொண்ட புனிதமான இடம் அந்த இடத்தில் அவரின் பெயரால், தூய்மையான நோக்கத்துடன் நடைபெற்றுவரும் அன்னதானச் செயற்பாட்டில் 'தடை ஏற்பட முடியுமா? அதனைச்சந்நிதியான் பார்த்துக் கொண்டுதான் இருப்பானா?

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு.

குறிப்பு:- சந்நிதிமுருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளன. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்ட மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம்பெறச் செய்யலாம்.

★ மக்களின் ஆசை எப்போதும் குறைவதில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையின் கொடுமுடி தாய்!

உலகெங்கும் எல்லாப் பெண்களையும் விடத் தாய் உயர்ந்தவளாகக் கருதப்படுகிறாள் தாய் எப்படி வளர்க்கிறாளோ அப்படி வளர்கிறார்கள் மாந்தர்கள். தாய்க்கு நிகர் தாயே. தாய் அன்பின் வெற்றிகளிலும் தாயே முனைப்பாகவுள்ளாள்.

உலகெங்கும் எல்லாப் பெண்களையும் விட தாய் உயர்ந்தவளாகக் கருதப்படுகிறாள். மனைவியும் பெற்ற பிள்ளைகளும் ஒரு மாந்தனை ( கணவனை ) கை விட்டுவிடலாம் ஆனால் தாய் ஒரு போதும் கைவிடமாட்டாள்.

எல்லா இடங்களிலும் பரந்தும், விரிந்துமிருக்கும் ஆற்றல் (சக்தி) தாயே. தாயை எவரோடும் ஒப்பிடக்கூடாது. தாய்ப்பாலுடன் பருகியது சாகும் வரை உடலோடும் உயிரோடும் வருவிக்கலந்து என்றும் எண்ணங்களுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கும்.

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்கதொரு மந்திரமில்லை; தாய் தன் பிள்ளையை வளர்ப்பதற்கு தன் உடம்பில் வரும் பாலை உணவாக ஊட்டுகிறாள். அப்போது அன்பு பெருக்கெடுத்து ஓடி தாயின் உள்ளத்தை உருக்கி விடுகிறது. தாயின் மனம் தன் பிள்ளையை வளர்க்கும் போது கடவுள் பக்தியையும் சமய பக்தியையும் ஊட்டுவது போல தேசபக்தியையும் ஊட்டி வளர்க்கிறாள்.

யுகங்களின் முடிவில் பரம்பிரமம் சிவசொரூபம் ஆடாமல் அசையாமல் எல்லையிறந்த காலம் நிசப்தமாக இருப்பதோடு படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், ஆக்கல் என எத்தொழிலும் நடைபெறாமல் இரவும் பகலும் இல்லாமல் அந்தகார இருளில் மூழ்கி வெகு காலத்துக்கு எச் செயலுமற்றுக்கிடக்கும்.

எதிர் பாராத விதம் ஒருவருக்கு விபத்து உண்டாவது போல பரம்பிரமம் அசைவு உண்டாகும். இது சக்தியின் வெளிப்பாடாகும். சக்தியின் வெளிப்பாடே ஏத்துவைத் தோற்றமும் ஒடுக்கமும் வருமாறு. பரமசிவனுடைய பராசக்தியின் அருளினாலே குடிலையிலே நாதந் தோன்றும் நாதத்திலே விந்து தோன்றும் விந்துவிலே சதாசிவமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் சாதாக்கியத்திலே மகேஸ்வரன் தோன்றும், மகேஸ்வரத்திலே; சுத்தவித்தை தோன்றும். இவை ஐந்தினுள் முன்சொன்ன விந்துவிலே நாலுவாக்கும் ஐம்பத்தோரட்சரமும் எண்பத்தொருபதமும். இருநூற்றிருபத்து நான்கு புவனமும் சப்தகோடி மஹாமந்திரமும் சகல சாஸ்திரமும் விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனுகரண புவன போகங்களும் சரியை, கிரியை, யோகங்களின் நோர்க்குச் சாலோக சாமீப, சாரூபமென்றும் பதமுத்திகளும் பஞ்ச கலைகளும் தோன்றும் இவைகள் சுத்த மாயையின் தோற்றமென்றறிக.

இனி அனந்ததேவ நாயனாரருளினாலே அசுத்த மாயையிலே நின்று காலமும் நியதியும் கலையும் தோன்றும். கலையிலே வித்தை தோன்றும். வித்தையிலே இராகம் தோன்றும்.

இனி உருத்திரதேவ நாயனாரருளினாலே முன்சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும்; மூலப்பிரதியிலே முக்குணங்களும் தோன்றும் முக்குணங்களும் தோன்றாது நின்றவிடம் அவ்வியக்கம் இந்த அவ்வியக்கத்திலே சித்தமும், புத்தியும் தோன்றும். புத்தியிலே அகங்காரம் தோன்றும், அதுதான் யான் எனதென்று விகற்பித்து வரும் அதுதான் அகந்தைக்கு வித்தாகும். அதுதான் தைசசாங்காரமென்றும், வைகாரிகாகங்கார மென்றும், பௌதாதிகாகங்காரமென்றும் மூன்று விதமாயிருக்கும். தைசசாகங்காரத்திலே சத்துவ குணத்தினுடைய மனமும் புத்தியும் இந்திரியங்களென்று பெயருடைய சுரோதத்திராதிகளைந்துந் தோன்றும் வைகாரிகாங்காரத்திலே ரஜோ குணத்தினையுடைய கருமேந்திரியங்களாகிய வாக்காதிகளைந்தும் தோன்றும். பௌதாதிகாகங்காரத்திலே தாமோ குணத்தினையுடைய தன் மாத்திரைகளாகிய சப்தாதிகளைந்துந் தோன்றும் சப்தத்திலே ஆகாசம் தோன்றும். பரிசத்திலே வாயு தோன்றும், ரூபத்திலே தேயு தோன்றும், ரசத்திலே அப்பு தோன்றும், கந்தத்திலே பிருதுவி தோன்றும் ஒடுங்குங் காலத்துத் தோன்றினவடிவேயொடுங்கும்.

## தத்துவ குணங்கள்

பிருதுவி உரத்துத்தரிக்கும் அப்பு குளிர்ந்து பதஞ்செய்யும் தேயு தட்டொன்றுவிக்கும் வாயு சபித்தெவையுந்திரட்டும் ஆகாசம் நிரந்தரமாயிடங் கொடுக்கும். சுரோத்திரஞ் சப்தத்தையும் துவக்குள்பரிசத்தையறியும் சக்ஷு ரூபத்தையறியும், சிங்நுவை ரசத்தையும் அறியும், கிராணங் கந்தத்தைபறியும் வாக்கு வணிக்கும் பாதம் கமனம் பண்ணும் பாணியிடுதலுஞ் செய்யும். பாயு மலவிசர்க்கத்தைச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெல்லாம் ஆனந்திக்கும். மனம் பற்றும் புத்தி நிச்சயிக்கும் அகங்காரமெழுந்திருக்கும், சித்தம் சிந்திக்கும் காலம் செல்காலம் நிகழ்காலம், எதிர்காலமென மூன்றாய் கருமத்தை நிச்சயம்பண்ணும், கலை ஆணவத்தை சிறிது நீக்கும், வித்தை அறிவையெழுப்பும், இராகம் பெற்றதைச்சிறிதாக்கி பெறாததிலே இச்சை உண்டாக்கும் புருடன் விடயத்திலே எழுந்திருக்கும் மாயை மயக்கும். சுத்த வித்தை, ஞானமிக்கு கிரியை, குறைந்திருக்கும். ஈசுரதத்துவம் ஞானமுங் கிரியையுமொத்திருக்கும் சாதாக்கியத்துவம் கிரியை அதிகமாயிருக்கும் சிவதத்துவம் ஞானமாயிருக்கும். சிவதத்துவம் சிவனுக்கிடம் நாதமென்றுபெயர் சத்தி தத்துவம் காருண்யத்திற்கிடம் விந்துவென்று பெயர். சாதாக்கிய தத்துவம் அனுக்கிரகத்திற்கிடம் சதாசிவமென்று பெயர். ஈசுரதத்துவம் திரோபவத்திற்கிடம் மகேசுரனென்று பெயர் சுத்த வித்தை சங்காரத் துக்கிடம் உருத்திரனென்று பெயர்.

## அநாதியாய் உள்ளவை மூன்று பதி, பசு, பாசம்

### இம் மூன்றும் அநாதி நித்தியம்

### பதி இலக்கணம்

**பதியாவது** :- ஒன்றாய் பரிபூரணமாய் அறிவுக்கறிவாய் நின்மலமாய் உயிர்க்குயிராய் குறியுங் குணமுமில்லாததாய் அருவும் உருவும் அருவுருவுமாய் இவை இல்லாததுமாய் அகண்டிதமாய் ஆனந்தமாய் விளங்குவதும்.

இன்னணம் விளங்குகிற பரம் சிவமும், பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி என்னும் பஞ்ச சக்திகளாகிய அருளும் பின்னமின்றிச் சூரியனும் கிரணமும் போல ஒன்றாயிருக்கும். இவ்வாறிருக்கிற பரமசிவம் ஆன்மாக்களை இரட்சிக்கும் பொருட்டு அருவமாகிய சிவம் சத்தி நாதம் விந்து நான்கும் அருவுருவமாகிய சதாசிவமும் ஒன்றும், உருவமாகிய மகேசுரன் உருத்திரன் இருவரும் இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரமா விஷ்ணுக்கள் இருவரும் ஆக ஒன்பது மூர்த்திகளுமாய் உபாதானத் திரவியங்களைக் கொண்டு சிருஷ்டித்தலும் திதித்தலும் சங்கரித்தலும் திரோபவித்தலும் அநுக்கிரகித்தலும் இங்ஙனம் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யா நிற்கும். எங்ஙனம் செய்யுமெனின் தன்மை, முன்னிலை, படர்க்கையாக நின்றியற்றும்.

இவற்றின் தன்மையாவது — பரிபூரணமாய் இருக்கை முன்னிலையாவது இச்சா ஞானக்கிரியைகளாயிருக்கை, படர்க்கையாவது — மனம், புத்தி, அகங்காரம், சித்தம், உள்ளம், ஆகாசம், அகாரம்

ஒருபோதும் நம்பிக்கையை இழந்து விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகாரம், மகாரம், விந்து நாதம், ஆக 5 பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆக 5 ஆகிய பதினைந்து பிரகாரமாயிருக்கை.

பிரபஞ்சம் இவ்விடங்களில் எவ்வாறு காரியப்படும் எனின் இவற்றுள் கரணங்களை அங்கரங்கள் செலுத்த அங்கங்களை மூர்த்திகள் செலுத்த இங்ஙனம் காரியப்படும். இவ்வாறு பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துகையிலும் அந்தச்சிவம் அதிற்றாயிற்று நிற்கும்.

[தொடரும் ..........

"சிவம்"

தற்பொழுது மின்சாரம் கிடைக்கின்றது. மின்ஒளி தொலைக்காட்சி, மின்விசிறி என்பவற்றைப் பயன்படுத்துகின்றோம். இதனால் நாம் உயர்ந்து விட்டோம் என்று நினைக்கக்கூடாது. இவற்றை நாம் எந்தத் தேவைகளுக்கு பயன்படுத்துகின்றோம். இவற்றை நாம் பயன்படுத்துவதால் என்ன வழிகளில் முன்னேறுகின்றோம் என்பது தான் முக்கியம்.

அதுமட்டுமன்றி எமது நெறிமுறைகளையும், பழக்கவழக்கங்களையும் மறந்து அதிகமான இளைஞர்கள் இன்று கலாச்சாரச் சீரழிவுகளில் ஈடுபடுவது வருத்தமளிப்பதாகவும் உள்ளது. இந்த சீரழிவுகள் உலகளாவியரீதியில் ஏற்பட்டுச்செல்வதும் கவனிக்க வேண்டிய விடயமாக உள்ளது. இவற்றிற்கெல்லாம் காரணம் ஆத்மீகச்சிந்தனைகள் குன்றிப்போனதே.

ஞானச்சுடர் ஆடிமாத வெளியீட்டில்
திருமதி சண்முகலிங்கம் அவர்கள்

அதிகமாக பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞனல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பற்றின்றி வாழ்ந்த அபிராமி பட்டர்

மனித மனத்தின் விந்தையான இயல்பு எப்பொழுதும் ஒன்றைப் பற்றிக் கொண்டிருப்பதாகும். ஒன்றையும் பற்றாமல் இம்மனம் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியாத காரியம் என்று கூடச் சொல்லி விடலாம். மனித மனத்தின் இந்த இயல்பை நன்கு அறிந்த தாயுமான சுவாமிகள் ''மதம் பொருந்திய யானையைக்கூட வசப்படுத்தி நடத்தி விடலாம். கரடி வெம்மையான புலி என்பவற்றைக்கூட அடக்கி விடலாம்'' என்றெல்லாம் சொல்லி இறுதியாக சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது என்று கூறினார். நம் காலத்திலிருந்த சற்று முன்னர் வாழ்ந்த இராமலிங்க வள்ளலாரும் ''மனம் எனும் ஒரு பேய்க் குரங்கு'' என்று கூறியுள்ளார்.

மனத்துக்கும் குரங்குக்கும் சிறிய வேறுபாடுண்டு. குரங்கு மரத்தின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவுவதைப் பார்த்திருக்கிறோம். தான் தங்கியுள்ள கிளையை விட்டுவிட்டு அடுத்த கிளைக்குத் தாவுகிறது. முதற் கிளையைவிட்ட நேரத்துக்கும் இரண்டாவது கிளையைப் பற்றுகின்ற நேரத்திற்கும் இடைப்பட்ட நேரத்தில், ஒன்றையும் பற்றாமல் அக் குரங்கு வெட்டவெளியில் தான் சஞ்சரிக்கின்றது. இந்நேரம் ஒரு வினாடியாக இருப்பினும்கூட அந்த நேரத்தில் அது ஒன்றையும் பற்றாமல் இருப்பது என்னவோ உண்மைதான்.

விலங்காகிய குரங்குக்குக்கூட ஒருகணநேரம் ஒன்றையும் பற்றாமல் இருக்க முடிகிறது. ஆனால் ஆறு அறிவுடைய மனிதனுக்கோ என்றால் ஒரு வினாடியின் நூற்றில் ஒருபாகம்கூட ஒன்றையும் பற்றாமல், அதாவது நினைக்காமல் இருத்தல் இயலாத காரியம். அப்படியானால் மனத்தை அடக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது பயமான ஒன்றைப் பற்றிக்கொண்டால் ஒழிய மனத்தில் உள்ள ஆழ்ந்த பற்றை அதாவது ஆசையைப் போக்க முடியாது.

திருக்கடவூரிலே அபிராமி பட்டர் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். மார்க்கண்டேயர் சார்பாக எமனை உதைத்த பெருமானின் சக்தியுருவாக அவ்வூரில் அபிராமித் தேவி இருக்கிறாள். அந்த அம்பிகையிடம் தம் உடல் பொருள் ஆவி என்று மூன்றையும் அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார். அபிராமிபட்டர் இறைவியின் நாமத்தையே நினைத்து

★ அன்புநிறைந்த இன்சொல் இரும்புக்கதவைக் கூடத் திறக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்ததால் பட்டர் உலகச் சட்டங்கள் ஒன்றையும் நினைத்ததில்லை. இதனால் அவரைப் பயித்தியக்காரர் என்றும், குடி முதலிய தீயபழக்கங்கள் உடையவர் என்றும், சொல்ல ஊரார் அஞ்சவில்லை.

இப்பெரியவரின் காலத்தில் தஞ்சை மாவட்டத்தைக் கீர்த்தி வாய்ந்த சரபோஜி மன்னன் ஆட்சி செய்து வந்தான். தைமாத அமாவாசை அன்று சரபோஜிமன்னன் கடலாட காவிரிப்பூம் பட்டினம் செல்லப் புறப்பட்டான். வழியில் திருக்கடவூரில் உள்ள, காலனைக் காலால் உதைத்த பெருமானை வணங்க வேண்டும் என்று எண்ணி திருக்கோயிலினுள் நுழைந்தான். பெரிய மண்டபத்தின் ஒரு மூலையில் தூணின் அருகே ஒளி பொருந்திய முகத்தோடு அமர்ந்திருந்த அபிராமிப்பட்டரைக் கண்டான். அவருடன் பேச அரசன் விரும்பினான்.

''அரசே இவரைப் பெரிய யோகி என்று நினைத்துவிட வேண்டாம். மது மயக்கத்தால் தம்மை மறந்த நிலையில் இருக்கிறார். நாங்கள் சொல்வதில் நம்பிக்கை இல்லை என்றால் இவரைப் பார்த்து சாஸ்திர சம்பந்தமான கேள்வி ஒன்றைக் கேட்டுப் பாருங்கள்! பட்டர் குலத்தில் பிறந்த இவர் சாஸ்திரம் கற்றிருக்க வேண்டாமா? என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட மன்னன் ''பெரியவரே இன்று என்ன திதி'' என்று கேட்டான். அபிராமித் தேவியின் திருமுகமண்டலத்தை ஓயாது சிந்தித்துக் கொண்டிருக்கும் பட்டர் உடனே ''இன்று சுத்த பூர்ணிமை'' என்று பதிலிறுத்தார்.

இதைக்கேட்ட மன்னன் ''ஐயா இன்று அமாவாசை ஆதலால் நான் கடலாடச் செல்கிறேன். நீர் நினைக்கின்றபடி இன்று சுத்த பூர்ணிமையாக இல்லாவிட்டால் அரசனுடைய கோபம் உம்மைத் தண்டிக்கும்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். அரசன் போனபின்னர் அரசன் ஆணைக்கு அஞ்சி அழுதுகொண்டு பொழுதைக் கழிக்கவில்லை பட்டர்.

ஆனால் அமாவாசைத் தினத்தில் முழுச்சந்திரனை நினைக்குமாறு செய்தது எது அபிராமியின் பக்திப்பண்பேயாகும். தான் சொன்னதிற்கு தான் முழுப்பொறுப்புமில்லை என்பதை உணர்ந்த பட்டர் அந்த அபிராமியின் மேல் 'அபிராமி அந்தாதி' என்ற அழகிய பாமாலையைப் புனைந்தார். என்ன ஆச்சரியம்? காவிரிப்பூம் பட்டினத்தில் இரவுப் பொழுதைக் கழித்த சரபோஜி மன்னன் நீலக்கடலின் கிழக்கு முகட்டில் முழுச்சந்திரன்

★ தெரியாது என்று உணர்வது அறிவு அடைவதற்கு பெரியவழி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் அற்புதத்தைக் கண்டான். இது அபிராமிப்பட்டருக்காக அபிராமித்தாய் விளைத்த அற்புதம் என்ற பேருண்மையை உணர்ந்த மன்னன், ஓடோடியும் வந்து அவருடைய திருவடிகளிலே விழுந்து தன்பிழை பொறுக்குமாறு வேண்டிக் கொண்டான்.

பட்டர் இத்தகைய வாழ்க்கையை எப்படி மேற்கொள்ள முடிந்தது? பற்றுக்களை எல்லாம் கடந்து நிற்கும் இறைவனுடைய திருவடியைப் பற்றினால் ஒழிய உலகத்தின்மேல் கொண்ட மனப்பற்று விடாது என்ற உண்மையை உணர்ந்திருந்தது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு ......(குறள்)

ந. சிவபாதம்
(பத்தெனி)

## எதனாலும் அடங்காத ஆசை

துறவி ஒருவர் அந்த நகரத்திற்கு வந்திருந்தார். அவருடைய அறிவுரையைக் கேட்பதற்காக மக்கள் பலர் கூடியிருந்தார்கள்.

"எந்த நிலையிலும் ஆசைகொள்ளுதல் கூடாது. ஆசைப்படப்படத் துன்பங்கள் வந்துகொண்டே இருக்கும். ஆசையை விட விட மகிழ்ச்சி நிலையும்" என்றார் அவர்.

கூட்டத்தில் இருந்த ஒருவன், "துறவியாரே! நான் ஒருபொருளுக்கு ஆசைப்படுகின்றேன். அந்தப் பொருள் எனக்குக் கிடைக்கிறது. நான்மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆசையினால் எனக்கு எப்படி துன்பம் வரும்? ஏன் நான் ஆசையைவிட வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்குத் துறவி கிடைத்த பொருளினால் ஆசை தீர்வதில்லை. மேலும் மேலும் மனம் பொருள்களின் மீது ஆசைப்பட்டுக் கொண்டே இருக்கும். கடல் நீரைக் குடித்துத் தாகத்தைப் போக்குவது போன்றது நாம்நினைத்த ஆசைகள் அனைத்தும் நிறைவேறுவது. அதனால் நாம் மேலும் மேலும் தாகத்தால் துன்பப்படுவோமே தவிர தாகம் அடங்காது என்று விளக்கம் தந்தார்.

இறையருளுக்கு எப்பொழுதும் பஞ்சமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பக்கம்

# திருப்தி

திருப்தி என்பது மனநிறைவு. உலகிலே கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் திருப்தியுடையவர்களைக் காண்பது அரிது. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் அதிருப்தியுடன்தான் அல்லல் படுகின்றார்கள்.

பருத்தியுடையுடுத்தவன் பட்டாடை உடுத்தவனைக் கண்டு நமக்கு ஒரு பட்டாடை இல்லையே என்று பொருமுகின்றான். குடிசையில் வாழ்பவன் மாடியில் வாழ்பவனைப் பார்த்து மனம் உளைகின்றான்.

நிரம்பிய செல்வத்தையடைந்தால் திருப்தியுண்டாகின்றதா? இல்லை. பெரும் பெரும் பணம் படைந்தவர்களும் உண்ணாமலும் உறங்காமலும் பேயாய்ப் பறந்து திரிந்து அலைகின்றார்கள்.

ஆகவே திருப்தி என்பது பொருளின் சிறப்பில் அமைந்திருக்கவில்லை. அது மனத்தில் விளைகின்ற விளைவு நாம் திருப்தியுடன் இனிது வாழவேண்டுமானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

நாம் எப்போதும் நம்மினும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைக் கண்டு ஏதோ கடவுள் நமக்கு இவ்வளவாவது தந்தாரே போதும் என்று மனநிறைவு (திருப்தி) அடைய வேண்டும்.

நடந்து போகின்றவன் காலில்லாதவனைக் கண்டு கடவுள் நமக்கு நன்கு நடக்கக் கால்களைத் தந்தாரே என்று மகிழ்ச்சியடைய வேண்டும். காலில்லாத நொண்டி நாம் நோயில்லாமலாவது இருக்கிறோமே என்று மகிழவேண்டும்.

கஞ்சி குடிக்கின்றவன் பட்டினி கிடக்கின்றவனைக் கண்டு திருப்தியடைய வேண்டும். ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுகின்ற ஒருவன் ஐந்நூறு ரூபாய் ஊதியம் பெறுபவனைக் கண்டு திருப்தியடைய வேண்டும்.

★ காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் இரகசியம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் உயிர்களாகிய நம்மீது உள்ள கருணையினால் நம் மீட்சிக்கு ஏதுவையும் எதிர்பாராமல் இந்த உடம்பு, அறிவு, கண், வாய் முதலியவற்றையும் கதிர், மதி, கடல், காற்று, மலை, புனல் ஆகியவற்றையும் தந்துள்ளார். இவற்றைக் கைம்மாறு கருதாது படைத்துத் தந்தபரம் பொருளுக்கு நாம் நன்றி செலுத்துதல் வேண்டும்.

எனவே கிடைத்த பொருளைக் கண்டு இதுவாவது கிடைத்ததே என்று திருப்தியடைவதே அறிவுடைமை. அங்ஙனம் திருப்தியடைகின்றவனைக் கண்டு கடவுள் அருள் புரிகின்றார்; வாழ்த்துகின்றார்.

அதிருப்தி மனிதனை அழித்துவிடும் திருப்தி மனிதனை வாழ வைக்கும். ஆகவே அறிவுடைய நாம் நம்மிலும் உயர் நிலையில் உள்ளவரைக் கண்டு அதிருப்தியடையாமல் நம்மிலும் தாழ்நிலையிலே உள்ளவரைக் கண்டு திருப்தியடைய வேண்டும். இக்கருத்தை அழகாகக் குமரகுருபரர் " தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க " என்பார்.

ஆனால் கல்வி விடயத்தில் மட்டும் அப்படி இருக்கக் கூடாது எனக் குமரகுருபரர் கூறுவார். கல்வி குறைந்தவன் தம்மிலும் குறைந்த கல்வியுடையவனைக் கண்டு திருப்தியடையக் கூடாது. தம்மிலும் மேலான கல்வியாளரைக் கண்டு நாம் நன்கு கல்வி பயிலவில்லையே என்று கவலைகொண்டு மேலும் மேலும் கல்வி நலத்தைப் பெருக்குதல் வேண்டும்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று.

தொகுப்பு: செ. பாலச்சந்திரன்

நன்மையும், தீமையும், விளையக் கூடிய நிலமாக இருப்பது மனம். ஆதலின் அழுக்காற்றை வளர்க்கும் களைகளைக் களைந்துப் போக்கிக்க வேண்டும்.

அறிவாளி தனக்கு நேரும் இடையூறுகளைப் புறங்காண்பதில் தான் கருத்தூன்றி நின்றிருப்பான். வெற்றி பெறுவதெப்படி என்பது அவனுக்கு இரண்டாவது யோசனையே!

பிறந்தவர்கள் முன்னால் நியாயம் விளக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART — 19

1. Using Very aud too + adjective

E. g.

(a) The box is very heavy, but Mohan can lift it.

(b) The box is too heavy. Mohan cant ,lift it.

Here very and too come in front of adjective heavy

Very and Too do not have the Same meaning."

Very heavy means it is difficult but possible for Mohan to lift the box.

Too heavy means it is impossible for Mohan to lift it.

2. Complete the Sentences using too or very.

E. g:

The Tea is very hot, but I can drink it.

The Tea is too hot. I can't drink it

(1) I can't put my dictionary in my pocket.
My dictionary is ............ big

(2) I can't buy a boat because it's .................. expensive

★ எலும்பில்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் திரும்பும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) A Sports car is ............ expensive, but Ranjith can buy one if he wants to

(4) I can't eat this food because its ............ salty

(5) A Do you like your maths course?

B No, It's ............ difficult. I don't like it because I can't understand the maths.

(6) A It is Seventhirty. Do you want to go to the film?

B we can't It's ............ late. The film started at Seven

(7) A DiD you enjoy your dinner last night?

B yes. The food was ............ good.

(8) A Are you going to buy that shirt?

B No. It doesn't fit. It is ............ big

(9) A Do you think Ram is smart?

B yes I do. I think he is ............ inteliegent.

10) A My daughter wants to get married.

B what? But she can't! she's ............ young

S. Thurajrajah
(English Tutor)

நெஞ்சில் குறைந்துள்ள பிரார்த்தனையே மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் நம சிவாய

# சிவலிங்கம்

இந்த லிங்கங்களுள் சுயம்பு லிங்கமே சிறந்தது. இலங்கையில் கொக்கட்டிச் சோலை, ஒட்டிசுட்டான் போன்ற இடங்களில் தான் தோன்றி லிங்கங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் 68 ஆலயங்களில் சுயம்புலிங்கங்கள் இருந்தாலும் தென்னகத்தில் சப்தவிடங்கத்தலம் என 7 தலங்கள் போற்றப்படுகின்றன. விடங்க என்றால் உளிபடாதது செதுக்கப்படாதது எனப் பொருள்படும். அவை யாவன?

திருக்காராளி திருநள்ளாறு திருவாய்மூர்
திருக்கோளிலி திருமறைக்காடு திருவாரூர்
திருநாகைக்கா ரோணம் என்பனவாகும்.

மேலும், ஐம்பூதங்களைச் சிவலிங்கத்திற் காணும் மரபும் உண்டு. இந்தியாவிற் பின்வரும் தலங்கள் பஞ்சபூதத் தலங்களாக அழைக்கப் படுகின்றன. இங்கு பஞ்ச பூதலிங்கங்கள் உண்டு. இன்று ஈழத்திலும் சிவன் கோவில்களிற் பஞ்சலிங்கங்களாக இவை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக் கின்றன.

நிலம் (பிருதுவி) — திருவாரூர் (அல்லது காஞ்சி)
நீர் (அப்பு) — திருவானைக்கா (யானை அபிஷேகித்தது)
தீ (தேயு) — திருவண்ணாமலை (சிவன் சோதியாகத் தோன்றியது)
காற்று (வாயு) — திருக்காளத்தி (கண்ணப்பர் வழிபட்டது)
ஆகாயம் — சிதம்பரம் (கோவில்)

சிவலிங்கத்தின் அமைப்பு முக்கியமானது. இதுபற்றிப் பூர்வகாரணாகம பூர்வகாமிகாகம லிங்க லக்ஷண விதிப்படலத்திலும் மானசாரம் லிங்க விதானம் என்பதிலும் காசியபசில் பசாஸ்திரம் சிவலிங்க லக்ஷணம் என்பதிலும் சில்பரத்தினம் லிங்க லக்ஷணம் எனும் தலைப்பிலும் கூறுகின்றது.

சிவலிங்கம் அமைக்கப்படும் பொருட்கள் பற்றியும் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன கல், உலோகம், மண், மரம், நவரத்தினம் என்றும் விரத காலங்களில் அவ்வப்போது பூஜிப்பதற்காகக் கோமயம், அரிசிமா, மஞ்சள்மா, வெண்ணெய், சந்தனம், சர்க்கரை என்பவற்றாலும் செய்யலாம். இவை க்ஷணிகலிங்கம் எனப்படும்.

---

★ சொற்கள் குறைந்த பிராத்தனையே மேலானது. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

03 - 09 - 99 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. செ. க. துரைரத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர்)
(தலைவர் கலைவாணி ச. ச. நிலையம் மட்டுவில்)

சொற்பொழிவு: 'பக்தி இலக்கியத்தில் நகைச்சுவை'

வழங்குபவர் : திரு. சி. சதாசிவம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
(மட்டுவில் வேரற்கேணி அறங்காவல்சபை நிர்வாக உறுப்பினர்)

---

10 - 09 - 99 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: S. M. கிருஷ்ணகாந்தன் (ஆசிரியர்)

சொற்பொழிவு: 'யோகமும் தவமும்'

வழங்குபவர் : செல்வன் சிவஞானம் பாலமுரளி

---

17 - 09 - 99 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : கலாபூஷணம் வ. செல்லத்துரை

விடயம் ; 'இன்னிசை'

வழங்குபவர் : K. இராமநாதன் (சங்கீத வித்துவான்)

வயலின் — S. திவாகான்
மிருதங்கம் — S. துரைராசா
கடம் — A. செல்வரட்ணம்
முகர்சிங் — V. ரமணன்

---

24 - 09 - 99 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# புரட்டாதி - 1999

வெளியீட்டுரை : சமூகஜோதி கா. கணேசதாசன் J. P.
(ஓய்வுபெற்ற அதிபர், கொழும்புத்துறை)

மதிப்புரை : M. S. ஸ்ரீதயாளன்
(செயலாளர், வடமாகாண ஆசிரியர், சகாயநிதிச் சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org